www.padippakam.com

இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது. Registered as a Newspaper at the G.P.O

# புதிய கண்ணோட்டம்


PUTHIYA KANNOTTAM

පුදිය කණ්ණෝට්ටම්

வெளியீடு: 23 | 01 தை 1996 | விலை: ரூபா 7.00

## தைப்பொங்கலுக்கு தீர்வுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பு

# தீர்வுத் திட்டம் நிறைவேறுமா? வட-கிழக்கு இணையுமா?




ஆகஸ்ட் மாதம் 3ம் திகதி ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவினால் வெளியிடப்பட்ட அதிகாரப்பகிர்வு ஆலோசனைகள், தைப்பொங்கலின் பின்னர் சட்டவரைவாக (Legal Draft) பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் சமர்ப்பிக்கப்படுமென ஜனாதிபதி அவர்கள் தன்னைச் சந்தித்த தமிழ் கட்சிகளிடம் கடந்த மார்கழி மாதம் 11ம் திகதி கூறியுள்ளார்.

தீர்வுத்திட்ட ஆலோசனைகள் தமிழ்க்கட்சிகளுடன் கலந்துரையாடாமலே பாராளுமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட உள்ளது. தீர்வுத் திட்ட ஆலோசனைகளில் சில மாற்றங்கள் செய்ய வேண்டுமென ஈ.பி.ஆர்.எல்.எப். வலியுறுத்திய போதும், அம்மாற்றங்கள் தொடர்பாக அரசு கவனத்தில் கொள்ளவில்லை என்றே தோன்றுகின்றது. (எமது 01 ஐப்பசி 1995 திகதிய கண்ணோட்டத்தில் திருத்தங்கள் தொடர்பாக விபரமாக கூறியுள்ளோம்)

இதுதவிர, அரசியல் பகிர்விற்கான அலகு தொடர்பாக இதுவரை அரசு யாருடனும் கலந்து பேசவில்லை என்பதுடன், அரசுக்கும் இது தொடர்பான திட்டவட்டமான கொள்கை இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் வட-கிழக்கு முழுமையாக இணைந்த ஓர் சபையை கொடுப்பதற்கு இவ்வரசாங்கத்திற்கும் விருப்பம் இருப்பதாகத் தெரியவில்லை. வடக்கு-கிழக்கு தமிழ் மக்களுக்கிடையில் உள்ள வேறுபாடுகள், முஸ்லீம், சிங்கள மக்களின் பிரச்சினைகள் ஆகியவற்றை கூறி, கிழக்கை துண்டாடவே சகலரும் முயற்சிப்பதாகத் தோன்றுகின்றது.

வட-கிழக்கை இரண்டாகவோ, மூன்றாகவோ பிரிப்பது தொடர்பான பல அம்சங்கள் திரைமறைவில் விவாதிக்கப்பட்டு வருவதாகத் தோன்றுகின்றது. ஆனால் இவை தொடர்பாக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் கட்சிகள் இதுவரை மௌனமாகவே இருந்து வருகின்றன. அதேசமயம் அரசு யாழ்ப்பாணத்தை வெற்றி கொண்டது, மற்றும் தற்போதுள்ள சர்வ தேச ஆதரவையும் தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி வட-கிழக்கு இணைந்த மாகாணத்தை துண்டாடவே முயற்சிப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

அதேசமயம் வட-கிழக்கு ஒரே சபையாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் தமிழ்க் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமையில்லை என்பதும் இங்கு வேதனை அளிக்கும் விடயமாகும். வெள்ளம் தலைக்குமேல் போன பின்னர்தான் இவர்கள் கூப்பாடு போடுவார்கள்.

எல்லைகளை மீளமைப்பதோ, அன்றி வட-கிழக்கை துண்டாடுவதோ/இணைப்பதோ தொடர்பாக தெரிவுக் குழுவில் பேசுமாறே அரசு வற்புறுத்திவருகிறது. அதாவது அரசைப்பொறுத்தவரையில் தான் திட்டவட்டமாக ஓர் முடிவுக்கு வர விரும்பாமையையே இது காட்டுகிறது.

கடந்த மங்கள முனசிங்க தலைமையில் இருந்த தெரிவுக்குழுவும், வட-கிழக்கு இணைப்பை எதிர்த்ததால், சரியான முடிவுகளுக்கு அவர்களால் வரமுடியவில்லை. அப்பொழுது தெரிவுக்குழுவில் அங்கம் வகித்த தமிழ்க்கட்சிகள் இணைப்பு இல்லாத ஓர் சபையை அங்கீகரிக்க முடியாதென திட்டவட்டமாக கூறி இருந்தனர். இன்றிருக்கக் கூடிய தெரிவுக்குழுவிலும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐ.தே.கட்சியைச் சார்ந்த சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களே பெரும்பான்மையாக உள்ளனர். இந்நிலையில் இத் தெரிவுக்குழுவும் இணைப்பை அங்கீகரிக்குமா என்பது கேள்விக்குறியே.

இந்நிலையில் முழுமையான தீர்வொன்றில் நாட்டம் இருந்தால், அரசு வட-கிழக்கு இணைப்பு என்ற விடயத்தை அங்கீகரிப்பதற்கான வேலைகளை திட்டமிட்டுச் செய்ய வேண்டும். தமிழ் கட்சிகளும் குறுகிய தமது கட்சி நலன்களை மறந்து வட-கிழக்கு இணைப்பை உறுதிப்படுத்துவதற்கான ஓர் வேலைத்திட்டத்தை தயார் செய்ய வேண்டும். மக்களும் வட-கிழக்கு இணைப்பின் தேவையை அரசுக்கு வலியுறுத்த வேண்டும்.

இணைப்பு இல்லாத தீர்வு தமிழ் மக்களால் நிராகரிக்கப்படும் என்பதையும் அரசு புரிந்து கொள்ளுதல் வேண்டும். ●

## உள்ளே....

இனிய தமிழ் மக்களே!
செயலாளர் நாயகம் மடல் 03

வரலாற்று மாநகரம் வீழ்ந்தது
என். ஆர். சோமுவின் இராணுவ ஆய்வுக் கட்டுரை 04

யாழ்ப்பாணத்தைப் புலி எப்படி இழந்தது?
இந்திய அமைதிப்படைத் தளபதி கல்கட்டின் பேட்டிக் கட்டுரை 05

கொடுமைகள் தாமே அழிவதில்லை
விதுரன் 06

புலிகள் சாதனையாளர்கள்தான்... ஆம். நாசமறுப்பதில்!
மு. கணேசகுமார் 07

புலிகளின் தாகம்.... தமிழீழமா? தனிஅதிகாரமா? தமிழ் மக்கள் அழிவா?
எஸ். திருநாவுக்கரசு 08

குறுக்கெழுத்துப் போட்டி-19 09

போகிற போக்கில்....
சோலையூரான் 10

தப்புத் தாளங்கள் 11

புதுக்குடியிருப்பு-நடந்தது என்ன?
மட்டக்களப்பிலிருந்து ஆத்மன் 12

கடந்த ஆண்டுகளைப் போல்
காலை வாரி விடாமல்
"எரியும் பிரச்சினைக்கு
உரிய தீர்வு கிடைத்தது"
என்னும் செய்தியை
உன் நாட்களுள்
ஒன்றில் பொறித்துப்
புண்ணியம் கட்டிக் கொள்!
வா!

1996




பொங்கல் புதுவருட வாழ்த்துக்கள்

www.padippakam.com



# கண்ணோட்டம்

## எச்சரிக்கை–1

கடந்த 90ம் ஆண்டில் இருந்து வடமாகாணத்தின் பெரும்பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது. அரசுக்கெதிரான உணர்வை மக்கள் மத்தியில் வளர்ப்பதன் மூலமே அவர்கள் தங்களது கட்டுப்பாட்டில் இருப்பார்கள் என்றும் புலிகள் நம்பினார்கள். அது மாத்திரமல்லாமல் இராணுவ ரீதியாக தான் ஓர் பலமான நிலையில் இருப்பதாக அவ்வப் பொழுது காட்டிக்கொள்வதும் மக்கள் மத்தியில் நம்பிக்கையை வளர்க்க உதவியது. மின்சாரத்தை முழுமையாக இல்லாமல் துண்டித்தல், பங்கர் கட்டுகின்றோம் என்ற போர்வையில் முழுத் தண்டவாளமும், சிலிப்பர் கட்டையும் அகற்றப்பட்டு, புகையிரத சேவையை இல்லாமல் செய்ததுடன் ஏனைய போக்குவரத்துகளை முழுமையாக தமது கட்டுப்பாட்டுக்குள் நடத்துதல், சகல பொருட்களிற்கும் வரி அறவிடுதல், ஆட்கள் இல்லாத வீடுகளுக்கு வாடகை அறவிடுதல், இல்லையேல் அதனை அப்படியே எழுதி வேண்டுதல் என்ற வடிவத்தில் பல நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். மின்சாரம் இல்லாமல் முழு தொழில் துறையும், விவசாயமும் கூட செய்ய முடியாமல் போனது. மொத்தத்தில் புலிகளின் நடவடிக்கைகள் மக்களை மிகவும் பாரதூரமாக பாதித்தது. அரசின் பொருளாதாரத் தடைகள் ஒருபுறம் இருந்தாலும், புலிகளின் வரி விதிப்புகளும், பொதுச் சொத்துக்களை நாசமாக்கும் நடவடிக்கைகளும் மக்களை மிகவும் மோசமாக பாதித்தது.

மாணவர்கள் கல்வி கற்கமுடியாத நிலமை. ஒருகாலத்தில் கல்வியில் முதல் மாவட்டமாகத் திகழ்ந்த யாழ்ப்பாணம் பின்தங்கிய மாவட்டம் என்று முத்திரை குத்தும் நிலமை. மக்கள் மத்தியில் அரசுக்கெதிரான உணர்வொன்றை தொடர்ந்து வைத்திருக்க புலிகள் திட்டமிட்டு செய்த நடவடிக்கைகளே இதுவாகும். ஆனால் முழுத் தமிழ்ச் சமூகமும் எவ்வளவு தூரம் இதனால் துன்பப்பட்டது என்பதை முழு உலகமும் அறியும்.

இதேநிலையை கிழக்கு மாகாணத்தில் உருவாக்க புலிகள் தீவிரமாக முயற்சித்து வருகின்றார்கள். மின்மாற்றிகள் தொடர்ந்து குண்டு வைத்து தகர்க்கப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும்பகுதி இருளில் மூழ்கியுள்ளது. புதிய மின்மாற்றிகள் பொருத்தப்பட்டாலும் அவையும் குண்டுவைத்து தகர்க்கப்பட்டே வருகின்றது. மறுபுறத்தில் புகையிரத தண்டவாளங்கள் அகற்றப்படுகின்றன. நெருப்பு வைத்து கொழுத்தப்படுகின்றது. புகையிரதங்களும் தொடர்ச்சியாக துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளாகி வருகின்றன. புகையிரத சேவையை நிறுத்துவதற்கான முயற்சியே இதுவாகும். இது மாத்திரமல்லாமல் கடைகளில் கப்பம் அறவிடல், வரி அறவிடல் போன்றவைகளும், மாணவர்களின் கல்வியைத் துண்டிக்கும் நடவடிக்கைகளும் இவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இது யாழ்ப்பாணத்திலும் விட மோசமான நிலையையே கிழக்கு மாகாணத்தில் உருவாக்கும். இவை எல்லாவற்றையும் பார்த்தும் கேட்டும் மக்கள் மௌனிகளாக இருப்பார்களெனில், மக்கள் மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப் படுவார்கள் என எச்சரிக்க விரும்புகின்றோம்.

புலிகளின் துப்பாக்கிகளுக்கு பயந்து யாழ்ப்பாண மக்களும் மௌனிகளாகவே இருந்தனர். அவர்கள் என்ன நடவடிக்கையில் ஈடுபட்டாலும் அதனை எதிர்த்து வாய்திறக்க முடியாத நிலமை. படித்த புத்திஜீவிகளும், அறிவுஜீவிகளும் கூட புலிகளின் இந்நடவடிக்கைகளுக்கு நியாயம் கற்பித்தார்கள்; இல்லையேல் நியாயப்படுத்த நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இப்படியான ஓர் நிலை கிழக்கு மக்களுக்கும் ஏற்பட வேண்டாம். இவர்களின் நடவடிக்கைகள் எந்தவிதத்திலும் விடுதலைக்கான, மக்களின் விமோசனத்திற்கான நடவடிக்கைகள் அல்ல. ஆகவே தயவுசெய்து இவ்வாறான மக்கள் விரோத நடவடிக்கைகளை நிறுத்துமாறு புலிகளுக்கு அறிவுரை கூறுங்கள். மக்கள் எல்லோரும் ஒன்றுபட்டு ஒரேகுரலில் கூறினால் புலிகள் அதற்கு செவிசாய்த்தே ஆகவேண்டும். கிழக்கின் மக்கள் மன்றங்கள், பொது ஸ்தாபனங்கள், வியாபாரச் சங்கங்கள், பல்கலைக்கழக மற்றும் ஏனைய மாணவ அமைப்புக்கள் இவற்றை தமது உடனடிக் கவனத்திற்கெடுக்க வேண்டுமென ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வேண்டுகோள் விடுக்கின்றது.

## எச்சரிக்கை–2

"சாவகச்சேரியில் இருந்து யாழ் சென்ற நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கைதடியில் புலிகளால் வழிமறிக்கப்பட்டனர். தொடர்ந்து செல்ல புலிகள் அனுமதிக்காததால் ஏற்பட்ட தகராறில் மக்கள் நையப்புடைக்கப்பட்டு திருப்பித் துரத்தப்பட்டனர்."

"நாவற்குழியில் இருந்து இரண்டு வள்ளங்களில் குருநகர் சென்ற மக்கள் புலிகளால் கடலில் மறிக்கப்பட்டனர். ஒரு வள்ளத்துக்கு என்ன நடந்ததெனத் தெரியவில்லை. மற்றைய வள்ளத்தில் சென்றவர்கள் தாக்கப்பட்டு மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்."

"சாவகச்சேரியில் அனுமதி கொடுக்க மறுத்த புலிகளின் அலுவலகம் பொதுமக்களால் அடித்துடைக்கப்பட்டது." முல்லைத்தீவில் இளைஞர் யுவதிகளை திரட்ட புலிகள் நடாத்திய கூட்டத்தை பொதுமக்கள் கலைத்ததுடன் புலிகளை அடித்தும் விரட்டினார்களாம்.".

இவை எல்லாம் அண்மையில் நடந்த சில சம்பவங்கள். அதுவரையும் அடிமைகளை விட மிக மோசமாக அடக்கப்பட்டிருந்த மக்களின் ஆத்திர உணர்வுகளே இவை. மக்கள் தொடர்ந்தும் அடிமைகளாக அடக்கி ஒடுக்கப்படுவதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதையே மேற்கண்ட சம்பவங்கள் விளக்கி நிற்கின்றன.

கடந்த ஐந்து வருடமாக புலிகள் சொல்வதற்கெல்லாம் தலையாட்டி, இருக்கச் சொன்னால் இருந்து, எழும்பச் சொன்னால் எழும்பி, கைகட்டி வாய் பொத்தி நின்ற மக்கள் தான் இன்று புலிகளுக்கு எதிராகத் திரும்பி உள்ளார்கள். ஏனெனில் ஈழம் கிடைக்கும், தனிநாடு கிடைக்கும், புலிகள் அதனைச் சாதிப்பார்கள் என்பதால் சகல துன்பங்களையும் பொறுத்துக்கொண்டனர்.

ஆனால் இன்று ஈழமும் கனவாகி, தனிநாடும் கனவாகி, மக்கள் எல்லோருமே மிருகங்களிலும்விடக் கேவலமாக புலிகளால் மதிக்கப்படும் சூழ்நிலையில் அவர்களுக்கு புலிகளுக்கெதிராக மோதுவதைத் தவிர வேறுவழியில்லை. மக்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்கு செல்ல அனுமதி இல்லை. மக்கள் தனது உறவினரோடு எங்காவது போய்த் தங்க அனுமதியில்லை. மக்கள் எல்லோருமே நெரிசலான அகதி முகாம்களில் புழுக்களைப்போல் நெளிய வேண்டும் என்றே புலிகள் எதிர்பார்க்கின்றார்கள்.

5வருடம் இவர்களை அடக்கி ஒடுக்கி வாழ்நத எம்மால் தொடர்ந்தும் அப்படிச் செய்ய முடியாதா என புலிகள் எதிர்பார்த்தால் அவர்கள் தவறு விடுகின்றார்கள் என்றே அர்த்தமாகும். பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. இதனை புலிகள் உணர வேண்டும். அதுமாத்திரமல்ல, மக்களின் மன உணர்வுகளை அவர்களின் சுதந்திரத்தை மறுக்கும் எவருக்கும் மக்கள் பாடம் புகட்டுவார்கள் என எச்சரிக்க விரும்புகின்றோம். அது புலிகளாக இருந்தாலென்ன, குட்டி ராஜாங்கங்களை நடத்தும் குட்டிப் புலிகளாக இருந்தாலென்ன. மக்களை நீண்ட நாட்களுக்கு அடக்கி ஒடுக்கி வாழமுடியாது என்பதை இவர்கள் உணரவேண்டும்.



ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தோழர்களால் கொழும்பு நகர தமிழ் வர்த்தகர்களிடம் சேகரிக்கப்பட்ட அத்தியாவசிய பாவனைப்பொருட்கள் வடபகுதியில் இடம்பெயர்ந்துள்ள அகதிகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நகர தமிழ் வர்த்தகர்களால் மனமுவந்து அளிக்கப்பட்ட அரிசி, மா, சீனி, பருப்பு கருவாடு, பால்மா, போன்ற உணவுப் பொருட்களும் நுளம்புத்திரி மற்றும் உடுப்பு வகைகளும் அடங்கிய முதல் தொகுதி நிவாரணப் பொருட்கள் வவுனியா அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டு வடபகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

கடந்த 19.12.95 அன்று ஈ.பி.ஆர்.எல்.எப். மத்திய குழு உறுப்பினர் தி. சிறீதரன் தலைமையில் சென்ற குழுவினர் இரண்டரை இலட்ச ரூபா பெறுமதிவாய்ந்த இந்த முதல் தொகுதி நிவாரணப் பொருட்களை வவுனியா அரசாங்க அதிபர் கே. கணேஸ் அவர்களிடம் கையளித்தனர்.

இடம்பெயர்ந்த அகதிகளுக்காக மற்றொரு தொகுதி நிவாரணப் பொருட்கள் விரைவில் அனுப்பிவைக்கப்பட உள்ளது எனவும், ஈ.பி.ஆர்.எல்.எப். தொண்டர்கள் கொழும்பு நகரில் அகதிகளுக்கான நிவாரண உதவிகளை சேகரிக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.



### தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதியகண்ணோட்டம் வரவேற்கிறது. அனுப்ப வேண்டிய முகவரி:

**புதியகண்ணோட்டம்,**
**த.பெ.இல: 442,**
**கொழும்பு**

புதியகண்ணோட்டம் தொடர்பான அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

29A, வாவிக்கரை வீதி-1,
மட்டக்களப்பு.
☎ 065-2398

88/2, வாடிவீட்டு வீதி,
கல்முனை.

54, மாணிக்கவாசகர் வீதி,
திருகோணமலை.
☎ 026-22858

22, வெளிவட்ட வீதி,
வவுனியா.
☎ 024-2070

மன்னார்
☎ 023-2370

வெளிநாட்டு முகவரிகள்:

Post Bag: 1041,
Madras-17,
India.

B.M.Box: 1738,
London-WCIX-3NN,
U.K.

P.Box: 6800,
Agincourt,
Ont-MIS3C6,
Canada.

E.P.I.C
Box No: 95,
95144, Garges Les,
Gonnesse Cedex,
France.

P.Fach: 100206,
44002 Dortmund,
Germany.

P.Fach: 506,
Bern-17,
Switzerland.

படிப்பகம்


www.padippakam.com



*அன்பிற்கினிய தமிழ் மக்களுக்கு, தமிழ் மக்களின் எதிர்காலம் தொடர்பாகவும், அவர்களது உரிமைகள் தொடர்பாகவும் காத்திரமான முடிவுகள் எடுத்து செயற்பட வேண்டிய சூழ்நிலையில் இக்கடிதத்தை உங்களுக்கு எழுதுகின்றேன்....*



# இனிய தமிழ் மக்களே!...



கடந்த பதினைந்து வருடப் போராட்டத்தில் தமிழினம் மிகவும் பலவீனப்பட்டுப்போன சூழ்நிலையில் நாம் உள்ளோம். ஒருபக்கம் போராட்டம் மிகவும் பலவீனப்பட்டுப்போயுள்ளதுடன், புலிகள் மீதும் ஆயுதப் போராட்டம் மீதும் ஒருசிலருக்கு இருந்த நம்பிக்கையுமற்று, போராட்டத்தை தொடரமுடியாதளவுக்கு மக்களும் பலவீனப்பட்டு போயுள்ளார்கள். கடந்த 5 வருடங்களாக எந்த விதமான சௌகரியங்களும் அற்று செத்துப் பிழைத்துக் கொண்டிருந்த தமிழ் மக்கள், இன்று அனைத்தையும் இழந்து ஆண்டிகளாகவும் அநாதைகளாகவும் அகதிகளாகவும் மாற்றப்பட்டுள்ளனர்.

### அன்பிற்கினிய தமிழ் மக்களே!

நான் இப்பகுதியில் பலதடவை கூறியதுபோல், துப்பாக்கிகள் மீது கொண்ட அதீத நம்பிக்கையும் காதலுமே இன்றைய புலிகளின் தோல்விக்கு காரணம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். சர்வதேச சமூகத்திடம் இருந்து அந்நியப்பட்டு,, தனது நண்பன் யார் பகைவன் யார் என்பதை மறந்து சகோதரப் படுகொலையில் ஈடுபட்டு சகல தமிழ் இயக்கங்களையும் விரோதித்துக் கொண்டவர்கள்,..... தம்மால் தனித்து நின்று "தமிழீழத்தை" நிறுவ முடியும் என்று மார்தட்டியவர்கள் வரலாற்றில் முதல் தடவையாக யாழ்ப்பாணத்தையும் இழந்து போயுள்ளார்கள்.

துப்பாக்கிகள் மீதிருந்த நம்பிக்கையளவு அரசியல் சாணக்கியமும் தேவை என்பதை மறந்து செயற்பட்டதால், இன்று அநாவசிய இழப்புக்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது. அமைதி சமாதானம் ஏற்படுத்துவோம் என உத்தரவாதமளித்து வந்தவர்களும் கூட அவற்றிலும் விட யுத்தத்திற்கே முன்னுரிமை கொடுப்போராய் உள்ளார்கள்.

போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தை மீறி யுத்தத்தை ஆரம்பித்தவர்கள் புலிகளே என அரசால் குற்றம் சாட்டப்படுகின்றது. அது ஒரு வகையில் நியாயமாக இருந்தாலும் கூட போரை நடத்திய அளவு வேகமாய் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வை நடைமுறைப்படுத்த அரசு முற்படவில்லை என்பது, அரசின் மீதே நிச்சமாக யாருக்கும் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தும்.

ஆகஸ்ட் மாதம் 3ம் திகதி ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட ஆலோசனைகள் தொடர்பாக இதுவரை தமிழ் கட்சிகளுடன் எந்தவிதப் பேச்சுவார்த்தையையும் நடாத்த விரும்பவில்லை என்பது அரசின் அக்கறையீனத்தையே காட்டுகின்றது.

### அன்பார்ந்த தமிழ் மக்களே!

ஒருபக்கம் அரசு யுத்தத்தில் வெற்றிபெற்றுள்ள நிலை, மறுபக்கம், அரசியல் தீர்வை நிறைவேற்றுவதில் அசட்டையீனம். இந்நிலையில் அரசை தட்டிக் கேட்கக்கூடிய வல்லமை அற்று தமிழ் கட்சிகள் இருக்கின்றன என்பதுதான் வேதனை தரத்தக்கது.

அரசு வெளியிட்ட ஆலோசனைகள் அரைகுறையானவை, இவை திருத்தப்பட வேண்டும்,, இவை தொடர்பாக தமிழ் மக்களின் தரப்பில் இருந்து சரியான ஆலோசனைகள் முன்வைக்கப்பட வேண்டும். அவைகூட ஒரேகுரலில் அமைய வேண்டும் என்று சிந்திக்காமல் இருப்பதானது தமிழ் கட்சிகள் தமது இனத்துக்கு செய்யும் துரோகமாகவே இருக்கும்.

எவ்வளவு தூரம் ஏனைய இயக்கங்கள் கட்சிகள் யாவும் அழித்தொழிக்கப்பட வேண்டும்,, யாருடனும் இணைந்து செயற்பட முடியாதென புலிகள் கூறுகின்றனவோ அதனை மாதிரியே, தமிழர் விடுதலைக் கூட்டணியும் கூட யாருடனும் இணைந்து போகமுடியாது, தாம் தனி வழிதான் செல்வோமென்பது, தமிழ் மக்களின் கோரிக்கையை மேலும் பலவீனப்படுத்தவே உதவும்.

பிரேமதாசா அரசாங்கத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவென மங்களமுனசிங்கா தலைமையில் பாராளுமன்றத்தில் ஓர் தெரிவுக்குழு ஏற்படுத்தப்பட்டது. இரண்டு வருடங்களுக்கு மேலாக 40 முறை கூடிப்பேசிய இவர்களால் இறுதியாக தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஓர் முடிவுக்கு வரமுடியவில்லை. இதனை வேறு விதமாக கூறுவதாக இருந்தால் தமிழ் கட்சிகள் ஒருமித்த குரலில் ஐக்கியப்பட்டு செயற்பட்டதால் ஐ.தே.க. அரசாங்கத்தால் தமது அரைகுறைத் தீர்வை எம்மீது திணிக்க முடியவில்லை.

அன்றும் கூட, சமஷ்டி ஆட்சி தருகின்றோம், இந்தியாவில் மாநிலங்களுக்கு இருக்கக்கூடியளவிலான அதிகாரங்கள் தருகின்றோம். ஆனால் வட-கிழக்கு இணைப்பை தரமுடியாது என கூறினார்கள். இதனால் மங்களமுனசிங்கா குழுவின் இரண்டு வருட முயற்சியுமே வீணாகப் போனது.

அதனைப் போன்றே இப்பொழுதும் அதிக அதிகாரங்கள் தருகின்றோம், ஆனால் இணைப்பைக் கோரக்கூடாது என்ற தொனியிலேயே காரியங்கள் நடந்தேறி வருகின்றன. ஆனால் இவற்றைத் தட்டிக் கேட்க, இல்லையேல் இவை தொடர்பான பேச்சுவார்த்தைகளை தமிழ் கட்சிகளுடன் நடாத்த வேண்டுமெனக் கேட்கக் கூடியளவிற்குகூட தமிழ் கட்சிகள் மத்தியில் ஐக்கியம் இன்மை என்பது மிகவும் வருந்தத்தக்கது.

### அன்பான தமிழ் மக்களே!

ஒருசில மாதங்களுக்கு முன்னர் தமிழ்க் கட்சிகள் இடையில் ஓர் குறைந்த பட்ச ஐக்கியத்தை உருவாக்க ஈ.பி.ஆர்.எல்.எப். முயற்சி செய்தது. இதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி., ரெலோ போன்றவை மறுப்புத் தெரிவித்தன. பின்னர், "ரிவிரெச" யுத்தம் ஆரம்பித்ததும் ரெலோ எல்லோரையும் இணைத்து இந்த யுத்தத்திற்கு எதிர்ப்புக் காட்டவிரும்பியது. ரெலோ அழைப்பு விடுத்தால் தம்மால் வரமுடியாதென்று தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஈ.பி.டி.பி. யும் கூறியதால் இ.தொ.கா. மூலம் அழைப்புக்கள் அனுப்பப்பட்டு தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப்., ரெலோ, ஈரோஸ், புளொட், ஈ.பி.டி.பி., இ.தொ.கா., தொழிலாளர் தேசிய சங்கம், மலையக மக்கள் முன்னணி என 9 கட்சிகள் கூடிப்பேசின.

அத்துடன் யுத்தநிறுத்தம், அகதிகள் பிரச்சினை தொடர்பாகவும் ஜனாதிபதியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தின. ஆனால் அதன் பின்னர் அந்த ஐக்கியம் குலைந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணி தம்மால் தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து போகமுடியாதென்றார்கள். அதனைப் போன்றே ஈ.பி.டி.பி.யும் தம்மால் ஏனைய கட்சிகளுடன் கூட்டாகப் போக முடியாதென்றார்கள்.

மொத்தத்தில் அரசு தான் விரும்பியவாறு தமிழ்க் கட்சிகளை கையாளக்கூடிய விதத்தில் இவர்கள் பிரிந்து சென்று கொண்டிருக்கின்றார்கள்.

### அன்பிற்கினிய தமிழ் மக்களே!

இந்த இறுதி நேரத்திலும் கூட தமிழ் கட்சிகள் தமது குறுகிய கட்சிசார்ந்த அரசியல் இலாபங்களிலேயே குறியாக இருக்கின்றார்களே தவிர, தமிழ் மக்களின் உரிமைகளிலோ அல்லது அவர்களின் எதிர்காலத்திலோ அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். முக்கியமாக பல சகாப்தங்களாக தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்கின்றோம் என்று சொல்லக்கூடிய மிகவும் அனுபவம் வாய்ந்த அரசியல் கனவான்களாகிய தமிழர்விடுதலைக் கூட்டணியினர் தமிழ் கட்சிகளின் ஐக்கியத்தை முழுமையாக எதிர்க்கின்றார்கள் என்பது அவர்களின் அரசியல் நிலைப்பாட்டை வெட்ட வெளிச்சமாக்குகின்றது.

நான் ஏற்கனவே இதற்கு முன்னைய மடல்களில் கூறியவாறு இவர்களை நம்பி இருப்போமாயின் எமக்கு கிடைப்பனவும் கிடைக்காமல் போகலாம். எனவே எமது உரிமைகளை நாமே வலியுறுத்த வேண்டும்.

### அன்பிற்கினிய தமிழ் மக்களே!

இவ்வளவு தோல்விகளுக்கும் மத்தியிலும் இயன்றவரை தமிழ்க்கட்சிகள் அடிப்படை விடயங்களிலாவது ஒன்றுபட வேண்டும் என்ற அடிப்படையில் சேர்ந்து பேசக்கூடிய சில தமிழ்க்கட்சிகள் தமக்கிடையில் ஓர் கருத்தொற்றுமை உருவாக்க சேர்ந்து பேசி வருகின்றன. ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈரோஸ்,,ரெலோ, புளொட் ஆகிய 4 கட்சிகளும் இதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுக்குள்ளும் பல முரண்பாடுகள் இருந்தபோதிலும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளான வட-கிழக்கு இணைப்பு, முழுமையான அதிகாரப் பகிர்வு போன்ற விடயங்களில் இணைந்து செயற்படுவதென முடிவெடுத்துள்ளோம்.

எமக்குக் கிடைத்த பல சந்தர்ப்பங்கள் கை நழுவிப் போயுள்ளன. இந்தியா எமக்கு உதவி செய்யமுனைந்தது. நாம் அதனை எட்டி உதைத்தோம். பின்னர் புலிகளும் பிரேமதாசாவும் பேசினார்கள். புலிகள் எல்லாவற்றையும் முறித்துக் கொண்டனர். இறுதியில் யாழ்ப்பாணத்தையும் இழந்து தமது இராணுவ பலமும் அற்பமானதே எனக் காட்டிக்கொண்டனர்.

இன்று எமக்கு உதவி செய்வார்கள் யாருமற்று, எமது அண்டைய நண்பர்களையும் இழந்துநிற்கும் இச் சூழ்நிலையில் எமக்கிடையில் ஐக்கியமும் இல்லையெனில் அது அரசுக்குத்தான் இலாபகரமாக இருக்கும்.

எனவே அன்பார்ந்த தமிழ் மக்களே! உங்கள் உரிமைகளை வென்றெடுப்பது இன்று மீண்டும் உங்கள் கைக்கே வந்துள்ளது. அரசிற்கோ இராணுவத்திற்கோ புலிகளுக்கோ பயந்துபோய் வாய்மூடி மௌனிகளாய் இருப்பின், நாம் சாக்கடைக்குள் தூக்கி வீசப்படுவோம். எமது கோரிக்கைகள் ஏற்கப்படாத பட்சத்தில் எமது எதிர்ப்பைக் காட்டுவது மாத்திரமல்லாமல், எமது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கான போராட்டங்களையும் நடாத்த வேண்டும். இது இன்று எமக்கு முன்னால் உள்ள ஒரே ஒரு வழியாகும்.

ஐக்கியப்படுவோம் போராடுவோம் உரிமைகளை வென்றெடுப்போம்.

*தோழமையுடன்,*
*சுரேஷ் பிரேமச்சந்திரன்*

---

## பி.பி.சி. ஆனந்தியின் கவனத்திற்கு வராத கடிதங்கள்

### தமிழ் நாட்டு உணர்வலைகள் - தமிழகப் பத்திரிகைகளிலிருந்து....

இலங்கைத் தமிழர் துன்பங்களுக்கு முடிவும், விடுதலைப் புலிகளுக்கு முற்றுப் புள்ளியும் என்பது வெவ்வேறு கூறுகள். இதில் முதலில் செய்ய வேண்டியது, விடுதலைப் புலிகளின் பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகள்தான்.

– வி.சி. விஜய்சங்கர், சென்னை-26.

ராணுவம் யாழ் நகரைப் பிடிக்கலாம்; பிடிக்காமல் போகலாம். ஆனால் தீர்வு பேச்சு வார்த்தையில் மட்டுமே இருக்கிறது.

– தஷ்ணா. சங்கர், திண்டுக்கல்.

தற்போது தமிழகத்தில் புலிகள் ஆதரவுப் பிரச்சாரம், 'இனப் படுகொலை எதிர்ப்பு' என்ற போர்வையில் வளர்ந்து வருகிறது. தமிழக மக்களின் மறதியின்மேல் அபார நம்பிக்கை கொண்ட அரசியல் தலைவர்கள், ராஜீவ் காந்தியின் கொடிய படுகொலையும் மறக்கப்பட்டிருக்கும் என்று நினைத்து விட்டார்கள் போலும்.

கடந்த காலங்களில் இருந்த சிங்கள-தமிழ் இன மோதல், இலங்கையில் தற்போது நடப்பதாகத் தெரியவில்லை. அங்கு நடப்பது 'புலிகள் நடத்தும் படுகொலை' மட்டுமே! தி.மு.க. 'பந்த்' அறிவித்ததால் மற்ற கட்சிகளும் தங்கள் 'இனப் பற்றை' பறைசாற்றிக் கொண்டன. ஆனால் தமிழ் மக்களில் பெரும்பாலானோர் இலங்கைப் பிரச்சினையில் நம் நாடு தலையிடுவதை விரும்பவில்லை.

– எம். பாரதி, திருப்பரங்குன்றம்.

இலங்கையில் ரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடுவதற்கு புலிகளின் வறட்டுப் பிடிவாதமும் ராணுவத்தின் அலட்சியப் போக்குமே முக்கிய காரணம். சமாதானத்தின் விலை அதிகம்தான். இருப்பினும், எப்பாடுபட்டாவது வாங்கித்தான் ஆகவேண்டும்.

– ந. இரவிச்சந்திரன், சென்னை-15.

'புலிகள் தமிழர்களின் காவலனா?' என்ற கட்டுரை, சரியான தருணத்தில் கேட்கப்பட்டுள்ள நியாயமான கேள்விகளாகும். இலங்கைத் தமிழர்களுக்காக குரல் கொடுப்பதாகக் கூறி, இங்குள்ள தமிழர்களிடம் தங்கள் செல்வாக்கை வளர்க்க முற்படும் தலைவர்கள்தான் தமிழகத்தில் அதிகம். அவ்வப்பொழுது தங்கள் மேதாவித்தனத்தை அறிக்கை மூலம் வெளிப்படுத்தி, தங்களுக்கு ஒரு விலாசத்தை உருவாக்கிக் கொண்டிருக்கும் இவர்களிடம், இந்தக் கேள்விகளுக்கான பதிலை எதிர்பார்க்க முடியாது.

– என். குப்புசாமி, வெங்கிட்டாபுரம்.

யாருக்கு வெற்றி என்பதல்ல பிரச்சினை. தமிழ் மக்களுக்கு இலங்கை மண்ணில் உள்ள உரிமை நிலை நாட்டப்படுமா என்பதுதான் கேள்வி.


– கே.என்.பாலகிருஷ்ணன், கும்பகோணம்.

படிப்பகம்

www.padippakam.com



# யாழ் குடாநாட்டு யுத்தம் - ஒக்டோபர் 1995




## வரலாற்று மாநகரம் வீழ்ந்தது

பத்து ஆண்டுகளுக்கு முன் 1985ம் ஆண்டு போராளிகளுக்கும், இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெற்ற 'திம்பு' பேச்சுவார்த்தையின் விளைவாக தமது முகாம்களில் அடைபட்டிருந்த இலங்கை இராணுவம் அவ்வப்போது வெளியில் வந்து போராளிகளுடன் சிறு சிறு சண்டையிட்டு மீண்டும் முகாம்களில் தஞ்சமடைந்த காலம் மாறி, இன்று 1995ம் ஆண்டு, அதாவது 10 ஆண்டுகளுக்குப் பின் கடற்படை, விமானப்படைகளின் உதவியுடன் காங்கேசன்துறை, பலாலி, இராணுவ முகாம்களிலிருந்து தரைப்படையினர் தமது பாரிய தாக்குதல்களை ஆரம்பித்திருக்கிறார்கள்.

இந்த ஆண்டில் இராணுவத்தின் மிகப்பெரிய தாக்குதல்களாக இராணுவ ஆய்வாளர்களால் கணிக்கப்படும் முன்னேறிப் பாய்ச்சலும் அதன் பின்னடைவும், இடிமுழக்கத்தாக்குதலும் அதன் முன்னடைவும், தொடர்ந்து சூரியக் கதிர்த் தாக்குதலின் மூலம் ஏற்பட்ட உறுதிப்பாடும் இன்று புலிகளின் கோட்டை என்று கருதப்படும் யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலின் கதவுகளைத் தட்டி யாழ் நகரத்தை இராணுவம் கைப்பற்றியிருக்கிறது.

நூற்றுக்கணக்கான புலிகள் இராணுவத்தின் உயிரிழப்புகளுக்கு மத்தியில் ஐம்பது நாட்களைக் கடந்து நடந்து கொண்டிருந்த இந்த யுத்தத்தில் பாரிய விளைவின் நிகழ்வுகளை சற்று ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகும்.

### உயிரிழப்புகளால் பலவீனம் படையினருக்கல்ல; புலிகளுக்கே

அக்டோபர் மாதம் முதலாந் திகதி புலிகளுக்கு எதிராக இராணுவத்தால் ஆரம்பிக்கப்பட்ட இடி முழக்கம் என்ற பேர் கொண்ட தாக்குதல் மூலம் புலிகள் இராணுவத்தை முன்னேற விடமாட்டார்கள் என்ற மக்களின் எதிர்பார்ப்பும், புலிகளின் எதிர்த் தாக்குதல்களும் தகர்த்தெறியப்பட்டிருக்கிறது. இத்தாக்குதல் மூலம் பலாலி இராணுவ முகாமின் கிழக்குப் பகுதியும் அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர் போன்ற சிறு நகரங்கள் உள்ளடங்கிய பருத்தித்துறை யாழ்ப்பாணம் வீதியும், யாழ் குடாநாட்டின் செம்மன் பிரதேசமாக அழைக்கப்படும் புன்னாலைக்கட்டுவன், வசாவிளான், இடைக்காடு, நவகிரி, தோப்பு, சிறுப்பிட்டி போன்ற சிறு கிராமங்களும் இராணுவத்தால் கைப்பற்றப்பட்டது.

வீழ்ச்சியுற்ற இந்த பிரதேசங்களை மீட்பதற்கான புலிகளின் முயற்சியும் முறியடிக்கப்பட்டிருக்கிறது. ஊடுருவித் தாக்க முயன்ற புலிகளின் அதிரடித் தாக்குதலுக்கு எதிர்த்தாக்குதல் மூலம் இராணுவம் பதிலடி கொடுத்திருக்கிறது. 200க்கும் அதிகமான புலிகள் கொல்லப்பட்டிருப்பதாக அஞ்சப்படும் இச்சம்பவத்தில் புலிகளின் முன்னணி வீரர்கள் சிலரும் உயிரிழந்திருக்கிறார்கள். சுகமாலன், அசீம், லூசியா உட்பட 118 புலிகளின் உடல்கள் ஐ.சி.ஆர்.சி. மூலம் இராணுவத்தால் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. புலிகளிடம் ஒப்படைக்கப்பட்ட உடல்களில் 10 பெண் புலிகளும் அடங்குவர்.

இராணுவத் தரப்பில் பல வீரர்கள் கொல்லப்பட்டாலும், இலங்கை அரசு அதைப்பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், ஒருகோடியே 10 லட்சம் சிங்கள மக்களைக் கொண்ட இலங்கையில், அரசு தரப்பில் சில ஆயிரம் வீரர்கள் இந்த யுத்தத்தில் பலியானாலும் அது அவர்களுக்கு பெரிய தொகையுமில்லை. கவலைப்பட வேண்டிய தேவையுமில்லை. ஆனால் புலிகளைப் பொறுத்தவரையில் உயிரிழப்புக்கள் கவனத்தில் எடுக்கப்படவேண்டிய விடயம் என்பதை அவர்கள் மறந்து விடக்கூடாது.

### வல்லமை பேசிய புலிகளுக்கு வாயடைப்பு

சமீப காலங்களில் தரைமார்க்கமாக இராணுவத்திற்கு எதிராக புலிகள் தொடுத்த தாக்குதல்கள் பலத்த உயிர்சேதத்துடன் தோல்வி கண்டது என்பது அவதானிக்கப்பட வேண்டிய விடயம். உதாரணமாக, வெலிஓயா இராணுவ முகாம் தாக்குதலும், இடிமுழக்கத் தாக்குதலுக்கு எதிரான தாக்குதலும் தோல்வியில் முடிந்ததென்பது, புலிகள் வலுவிழந்து காணப்படுகிறார்கள் என்பதையே காட்டுகிறது. அத்துடன், இடிமுழக்க தாக்குதல் மூலம் இராணுவத்தால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களை புலிகளால் விடுவிக்க முடியாமல் போனது கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

இந்நிலையில் இராணுவத்தின் அடுத்தகட்ட நடவடிக்கையாக அக்டோபர் 17ம் திகதி "சூரியக் கதிர்" என்ற புதிய பெயர் கொண்டு புலிகளுக்கு எதிரான தாக்குதல் ஆரம்பமானது. புவியியல் ரீதியாக யாழ் குடாநாட்டை நோக்குமிடத்து இதன் வடக்கு கிழக்கு மேற்கு பகுதிகள் ஆழம் நிறைந்த கடல்களால் சூழப்பட்டும் தெற்குப் பகுதி ஆழம் குறைந்த நீர் ஏரிகளால் சூழப்பட்டு (கிளாலி ஏரி) இலங்கைத் தீவுக்குள் ஒரு தீவாகவே அமைந்துள்ளது.

இலங்கையின் வன்னிப்பெரு நிலத்தையும் யாழ் குடாநாட்டையும் இணைக்கும் ஒரேயொரு வழிப் பாதையாக யாழ்ப்பாணம் கண்டி வீதி இருந்தாலும், இன்று ஆனையிறவு இராணுவ முகாமின் கட்டுப்பாட்டில் இந்த வீதி இருப்பதால் (கிட்டத்தட்ட மூன்று கிலோ மீற்றர்) தொடர்புகளும் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்ட நிலையிலேயே இருக்கிறது.

யாழ்நகரை புலிகளிடமிருந்து கைப்பற்ற வேண்டுமென்று இராணுவம் முனைப்புடன் செயல்படுத்திய இராணுவத்திட்டங்களையும் வியூகங்களையும் நோக்குமிடத்து, தங்களை யாராலும் வெல்ல முடியாது என்று நினைத்த புலிகளுக்கு ஒரு சவாலாகவே அமைந்திருக்கிறது.

யாழ் குடாநாட்டின் இராணுவ கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதான பாதைகளான காங்கேசன்துறை–யாழ்ப்பாணம் வீதியும், பலாலி–யாழ்ப்பாணம் வீதியும், பருத்தித்துறை–யாழ்ப்பாணம் வீதியும் யாழ் நகரை வந்தடைவதற்கான மார்க்கமாக இருந்தாலும், அதில் இரண்டு வீதியை இராணுவத்தினர் தேர்ந்தெடுத்தது யாழ் குடாநாட்டை இரண்டாகப் பிரிக்கும் வியூகமாகவே இருக்கும் என்பது இராணுவ ஆய்வாளர்களின் கருத்தாகும். அதுமட்டுமின்றி யாழ் நகரைக் கைப்பற்றுவதன் மூலம் வடகிழக்குப் பிரதேசம் தமது கட்டுப்பாட்டில் இருப்பதாக புலிகளால் செய்யப்படும் பிரச்சாரத்திற்கு ஒரு முற்றுப் புள்ளி வைப்பதும் அரசின் திட்டமாகும்.

### மக்கள் வெளியேறியது படையினர்க்கு முதல் வெற்றி

யாழ் நகரை சென்றடையும் இந்த மூன்று வீதிகளும்–ஒவ்வொன்றும் பதினைந்து கிலோ மீற்றர் தூரம் கொண்டது. அத்துடன் மக்கள் தொகை அடர்த்தியும் நிறைந்தவை. புலிகளின் கெரில்லா போர்முறையும் - மக்களை முன்னிறுத்தி தொடுக்கப்படும் எதிர்த்தாக்குதல்களையும், கண்ணி வெடியால் ஏற்படப்போகும் உயிர்ச் சேதங்களையும் உடல்சேதங்களையும் எப்படி சமாளிப்பதென்று மலைத்து நின்ற இராணுவத்தினருக்கு, புலிகளின் மிரட்டல்களையும் மீறி மக்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி வேறு இடங்களுக்கு தஞ்சம் தேடிப் போனது என்பது ஒரு ஆறுதலான விடயமாகும். ஏனென்றால் புலிகளிடமிருந்து மக்களை மீட்கப்போகிறோம் என்று இலங்கைஅரசு உலகுக்கு அறிவித்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில், இந்த யுத்தத்தின் விளைவால் மக்கள் அதிக அளவில் கொல்லப்பட்டால் சர்வதேச நெருக்கடி ஏற்பட்டு, தொடர்ந்து யுத்தத்தை நடத்த முடியாமல் போய்விடும் என்பதே அரசினதும் இராணுவத்தினதும் கவலையாக இருந்தது. ஆகவே யுத்தம் நடந்துகொண்டிருக்கும் இடங்களிலிருந்து மக்கள் வெளியேறியது இராணுவத்தைப் பொறுத்தவரையில் முதல் வெற்றி என்றே சொல்ல வேண்டும்.

ஆயிரக்கணக்கில் மக்கள் வேளியேறிச் செல்வார்கள் என்பதை சற்றும் எதிர்பார்க்காத புலிகள் வேறு வழியின்றி அதற்கு ஆதரவு தெரிவிப்பது போல் தங்களைக் காட்டிக்கொண்டு, சண்டை நடைபெறும் இடங்களில் உள்ள மக்கள் மட்டுமல்லாது குடாநாட்டின் வலிகாமம் பகுதி மக்கள் அனைவரும் (யாழ்நகர் உட்பட) தென்மராட்சியான சாவகச்சேரி பகுதிக்குச் செல்ல வேண்டுமென்று கட்டளை பிறப்பித்தார்கள். புலிகளின் கட்டளை என்பது வேண்டுகோள் அல்ல, அது கட்டாயம் என்பதே அவர்களின் வரைவிலக்கணம். முடிவு, மக்கள் இன்று தென்மராட்சியில் அகதிகளாக புலிகளின் பிடியில் சிக்கியிருக்கிறார்கள் என்பதே உண்மை.

### தங்கள் தளங்களிலிருந்து நழுவின புலிகள்

எனென்றால், நிதர்சனமாக நடந்துவிட்ட யாழ்ப்பாணம் வீழ்ச்சிக்குப் பின் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மக்களை வாழ விடுவதும், அரசு இராணுவ நிர்வாகத்தின் கீழ் மக்களைப் போக விடுவது என்பதும் புலிகளைப் பொறுத்தவரையில் மிகப்பெரிய அரசியல் இராணுவ பின்னடைவு என்றே சொல்ல வேண்டும்.

ஆகவே இராணுவ ரீதியாக பின்னடைவை எதிர்நோக்கியிருக்கும் புலிகள் ஏதாவதொரு தமிழ்ப் பிரதேசத்தில் மீண்டும் தங்கள் நிர்வாகத்தின் கீழ் மக்களைக் கொண்டுவந்து அகதிகள் பிரச்சினையை சர்வதேச அளவில் எழுப்பி, அரசுக்கெதிரான பிரச்சார யுத்தத்தை முடுக்கி விடுவதே அவர்களுக்கு இன்றுள்ள கவலையாகும். இன்றைய நிலையில் பிரச்சார யுத்தம் புலிகளுக்கும், அரசுக்கும் இன்றியமையாததாக இருக்கின்றது.

இது இவ்வாறிருக்க, இடிமுழக்கத் தாக்குதலின் வெற்றிக்குப் பின் இராணுவம் தனது புதிய சூரியக் கதிர் தாக்குதலை ஆரம்பித்தது. 25 000 வீரர்கள் கொண்ட இரண்டு பெரும் படைப் பிரிவுகளுடன் நகரத் தொடங்கியது. ஒரு படைப்பிரிவு பலாலி–யாழ்ப்பாணம் வீதி வழியாகவும், மற்ற படைப்பிரிவு பருத்தித்துறை–யாழ்ப்பாணம் வீதி வழியாகவும் புறப்பட்டு இரண்டு வீதிக்கும் இடைப்பட்ட சிறு சிறு கிராமங்கள் உள்ளடங்கிய ஆறு கிலோ மீற்றர் அகலத்துக்கான பிரதேசத்தை இரு வீதிகளுடன் இணைத்துக் கொண்டு இராணுவத்தினர் தமது பாரிய கடுந்தாக்குதலை அக்டோபர் 17ந்திகதி தொடங்கினார்கள்.

இத்தாக்குதலில் கனரக டாங்க்கர்களும், மோட்டார் பீரங்கிகளும், நவீன துப்பாக்கிகளும், எறி குண்டுகளும் இராணுவத்தால் பயன்படுத்தப்பட்டன. விமானப்படை விமானங்கள் புலிகளின் இராணுவ நிலைகளையும் அதைச்சுற்றியுள்ள பிரதேசங்களையும் குண்டு வீசித்தாக்க, தரைப்படையினர் பீரங்கித் தாக்குதல் முழங்க கடும் தாக்குதலை தொடுத்தார்கள்.

புலிகளும் எதிர்த்தாக்குதல் தொடுத்து இராணுவத்தினருடன் கடுமையாக மோதினாலும் இராணுவத்தினரின் முன்னேற்றத்தை புலிகளால் தடுக்க முடியவில்லை. மாறாக புலிகளின் முக்கிய தளங்களாகவும், நிர்வாக செயலகங்களாகவும் கருதப்பட்ட பல இடங்கள் குறிப்பாக பருத்தித்துறை–யாழ்ப்பாணம் வீதியிலுள்ள நீர்வேலி, கோப்பாய் போன்ற இடங்களும், பலாலி–யாழ்ப்பாணம் வீதியிலுள்ள உரும்பிராய், ஊரேழு, கோண்டாவில் போன்ற இடங்களும் திருநெல்வேலியிலுள்ள யாழ் பல்கலைக்கழகமும் இராணுவத்திடம் வீழ்ச்சியடைந்தன.

பருத்தித்துறை–யாழ்ப்பாணம் வீதியிலுள்ள கோப்பாய் என்ற இடத்தின் வீழ்ச்சிக்குப் பின் மூன்றாவது படைப்பிரிவு கல்வியங்காட்டிலிருந்து கிழக்கு நோக்கி நகர்ந்து, யாழ்நகரிலிருந்து தென்மராட்சி செல்லும் பிரதான பாதையான யாழ்ப்பாணம் -கண்டி வீதியையும், நாவற்குழி என்ற இடத்தையும் கைப்பற்றியது. ☞

என். ஆர். சோமு

www.padippakam.com



இராணுவத்தால் நாவற்குழி கைப்பற்றப்பட்டதன் மூலம் யாழ்ப்பாணத்திலிருந்து கேரதீவு-சங்குப்பிட்டி செல்லும் பாதையும் அடைபட்டது. இங்கிருந்து இராணுவத்தினர் பூநகரி இராணுவ முகாமுடன் தரைவழிப்பாதையையும், கடல் வழிப் பாதையையும் மிக இலகுவில் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

## இலங்கை ராணுவம் உலகில் எத்தனையாவது ராணுவம்?

யாழ்நகரை சில காலம் தக்கவைத்து நகருக்குள் நுழையும் இராணுவத்தினருக்கு அதிரடித் தாக்குதல் மூலம் பதிலடிகொடுக்கலாம் என்று காத்திருந்த புலிகளுக்கெதிராக மூன்றாவது போர்முனையை திறந்து இராணுவம் தனது பிடியை இறுக்கியது. இது புலிகளுக்கு ஏற்பட்ட பலத்த அடியாகும். இரண்டு போர்முனைகளில் இராணுவத்தை எதிர்கொள்வதில் திணறிக் கொண்டிருந்த புலிகள் மூன்றாவது போர் முனையை எப்படி எதிர்கொள்ள முடியும்? இருந்தாலும், புலிகள் உயிரைக்கொடுத்து முயற்சித்தார்கள். ஆனால் முடியவில்லை.

கோண்டாவில், நல்லூர், அரியாலை ஆகிய மூன்று யுத்தமுனைகளில் நிலைகொண்டிருந்த இராணுவம் யாழ் நகரை சென்றடைவதற்கு இன்னும் ஐந்து கிலோமீற்றர் இருக்கும்போது அதன் முன்னேற்றத்தை புலிகளால் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஆனால் யாழ்நகரை நெருங்க நெருங்க புலிகளின் கண்ணிவெடிகள் இராணுவத்தினரை அச்சுறுத்தினாலும், மிகப் பெரிய அளவில் கண்ணிவெடித் தாக்குதல் இல்லையென்றே சொல்ல வேண்டும்.

புலிகள் நிறைய கண்ணிவெடிகளை புதைத்து வைத்திருக்கிறார்கள். நாங்கள் அதன் மீதே நடந்துசெல்ல வேண்டியிருக்கிறது என்று இராணுவ பேச்சாளர் சரத்முனசிங்க திரும்பத் திரும்ப சொன்னது சர்வதேச ரீதியில் அனுதாபத்தைப் பெறுவதும்- இன்று கண்ணிவெடியை பயன்படுத்துவது பாரதூரமான குற்றம் என ஐக்கியநாடுகள் சபையால் தடை செய்யப்பட்டிருப்பதும், இதைப் புலிகளுக்கெதிராக இராணுவப் பேச்சாளர் பிரச்சார யுத்தமாகப் பயன்படுத்தியதும் கவனத்தில் கொள்ள வேண்டியதாகும்.

இராணுவத்தின் பிடி யாழ் நகரை சுற்றி இறுக இறுக புலிகளின் தாக்குதலும் அதிகரித்தது. வாழ்வா சாவா என்ற நிலையில் புலிகளால் தொடுக்கப்பட்ட தாக்குதல்கள் இராணுவத்தினருக்கு பலத்த உயிர்ச் சேதத்தையும், உடல் சேதத்தையும் கொடுத்தது. புலிகளின் மூர்க்கத்தனமான இந்தத் தாக்குதலை முறியடிப்பதற்கு விமானப்படையினர் யாழ் நகரில் உள்ள கட்டிடங்களை குண்டு வீசித் தகர்த்தார்கள். அத்துடன் நாலாவது போர்முனையும் மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்து திறக்கப்பட்டு மூன்று கிலோ மீற்றர் தூரங்கொண்ட பண்ணைப் பாலம் வழியாக யாழ்நகரை நோக்கி இராணுவம் நகரத் தொடங்கியது.

நான்குமுனைத் தாக்குதலையும் எதிர் கொள்ள முடியாத புலிகள் வேறு வழியின்றி யாழ் நகரை விட்டு பின்வாங்கி, யாழ் குடாநாட்டின் மேற்குப் பகுதியான வலிகாமம் நோக்கி சென்றிருப்பார்கள் என்றே நம்பப்படுகிறது. இறுதியில் யாழ்நகரின் மையப்பகுதிக்குள் மூன்றாம் திகதி இராணுவம் சென்றடைந்து பழங்கால -புலிகளால் இடித்து அழிக்கப்பட்ட- டச்சுக் கோட்டையில் சிங்கக் கொடியை ஏற்றினார்கள்.

உலகின் நாலாவது பெரிய இராணுவமாக கருதப்பட்ட இந்திய இராணுவத்தையே வெற்றிகொண்டவர்கள் நாங்கள் என தம்பட்டமடிக்கும் புலிகள், உலகின் எத்தனையாவது இராணுவம் என்று கணிப்பீட்டிற்குள்ளேயே வராத இலங்கை இராணுவத்திடம் யாழ் நகரை பறிகொடுத்தது என்பது மிகவும் அவமானத்திற்குரிய தோல்வியாகும்.

இராணுவத் தரப்பில் 500 வீரர்கள் பலியாகி, இரண்டாயிரம் வீரர்கள் காயமடைந்திருக்கிறார்கள் என இலங்கை அரசு தரப்பில் சொல்லப்பட்டாலும் இந்த எண்ணிக்கையை விட அதிகமாயிருக்கும் என்றே இராணுவ ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள்.

## இனிமேல் வரவிருக்கும் மாவீரக் காட்சிகள்

இராணுவம் யாழ்நகரை கைப்பற்றி யாழ் குடா நாட்டை இரு பகுதிகளாக துண்டாடினாலும், வலிகாமம் என்றழைக்கப்படும் குடா நாட்டின் மேற்குப் பகுதிகளான மல்லாகம், சுன்னாகம், இணுவில், கொக்குவில், தாவடி, ஆனைக்கோட்டை, மானிப்பாய், சண்டிலிப்பாய், நவாலி, அராலி, வட்டுக்கோட்டை, மூளாய் போன்ற பெரும் பகுதிகள் இன்னும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் வராமலிருப்பதும், யாழ் நகரிலிருந்து பின்வாங்கிய புலிகள் இந்தப் பகுதிகளிலிருந்து இராணுவத்திற்கெதிரான கெரில்லாத் தாக்குதலை தொடுப்பார்கள் என்பதும் நம்பப்படுகிற செய்திகளாகும்.

இனிவரும் காலங்களில் புலிகளின் ஸ்னிப்பர் தாக்குதல் (தனிநபரை தூர இருந்து துப்பாக்கியால் சுட்டுக்கொல்வது) அரிவாளால் தலையைக் கொய்தல், ஜொனி மைன்ஸ் மூலம் கால்களை எடுத்தல், குடிநீருக்குள் சைனைட் போட்டுக் கொல்லுதல், இராணுவ வாகனங்களுக்கு குண்டு வைத்தல், தனி நபர் தற்கொலைத் தாக்குதல், விஷக்கத்தி பாய்ச்சுதல் போன்ற தாக்குதல்களை இராணுவம் சந்திக்க வேண்டிவரும். இவைகளை எதிர்த்து தாக்குப் பிடித்தால்தான் யாழ்நகரின் வெற்றியை இராணுவம் நீண்டகாலத்திற்கு நிலைநிறுத்த முடியும்.

## 'தலையீடு' இல்லாமல் தகராறு தீருமா?

அதுமட்டுமின்றி இலங்கை இராணுவத்தால் கடவுள் என்றழைக்கப்படும் சீனாவின் தயாரிப்பான வை-8 (மூ-8) என்ற பெரிய போக்குவரத்து விமானம் நவம்பர் மாதம் 17ம் திகதி புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதும், அதைத் தொடர்ந்து உக்ரைன் நாட்டுத் தயாரிப்பான மிக நவீனமான இரண்டாவது சரக்கு விமானம் ஏ.என்-32, 21ம் திகதியும் சுட்டு வீழ்த்தப்பட்டதும் அரசுக்கும், இராணுவத்திற்கும் புலிகளால் விடப்பட்ட மிகப் பெரிய எச்சரிக்கையாகும். ஏனென்றால் இந்த ஆண்டும் ஏப்ரல் மாதத்திற்குப் பின் புலிகள்-இராணுவம் மோதல்களால் மூன்று விமானங்கள் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டும், ஒரு விமானம் இயந்திரக் கோளாறினால் தானாக நீர் கொழும்பு கடலில் காணாமல் போனதும் அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

யாழ் குடாநாட்டை இராணுவம் புலிகளிடமிருந்து முழுமையாக கைப்பற்றினாலும், வன்னிப் பெருநிலம் புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதால், யாழ் குடாநாட்டு இராணுவம் கப்பல் பாதையையும் விமானப்பாதையையும் நம்பியிருக்கும் நிலைமையே இருக்கிறது.

விமான எதிர்ப்பு ஏவுகணைகளையும், வெடிகுண்டு கட்டிச்சென்று தாக்கி அழிக்கும் தற்கொலைப் படையையும் வைத்திருக்கும் புலிகள் எதிர் காலத்தில் கடலில் இரண்டு கப்பல்களை மூழ்கடித்து இரண்டு விமானங்களை சுட்டு வீழ்த்தி, கடலையும் வானையும் ஓரளவு தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தால் யாழ் குடாநாட்டிற்குள் இருக்கும் 35,000 இராணுவ வீரர்களின் கதி என்னவாகுமென்று சொல்லத் தேவையில்லை.

வெளியாரின் தலையீடு எமக்குத் தேவையில்லை என்று ஐ.நா.செயலாளர் பூத்ரோஸ் காலியை நோக்கி கேட்ட கேள்வியை ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தில் மறு பரிசீலனை செய்தேயாக வேண்டும். ஆகவே, மூன்றாம் நாடு ஒன்றின் தலையீடோ, அல்லது மத்தியஸ்தமோ இல்லாமல் தமிழர் பிரச்சினையை தீர்க்க முடியாது என்பதே அரசியல் இராணுவ ஆய்வாளர்களின் கருத்தாகும்.

## முடிவில்லாத பேச்சுக்கு முட்டாள்கள் சிறந்தவர்கள்

இறுதியாக, இலங்கையின் உதவிப்பாதுகாப்பு மந்திரி யாழ் கோட்டையில் சிங்கக் கொடியை ஏற்றியபின், "வரலாற்று நகரமான யாப்பா பட்டுநாவை (யாழ் நகரம்) எமது வீரர்கள் கைப்பற்றிவிட்டார்கள்" என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு கொடுத்த செய்தியின் மூலம் தனது அடி மனதில் உள்ள இனத்துவேசத்தை கட்டுப்படுத்த முடியாமல் வெளிப்படுத்தியிருக்கிறார். ஒரு மந்திரியாலேயே கட்டுப்படுத்த முடியாத துவேசத்தை சாதாரண சிங்கள மக்களால் எப்படி கட்டுப்படுத்த முடியும்?

15ம் நூற்றாண்டில் நடந்ததாக எழுதப்பட்டிருக்கும் ஒரு வரலாற்றுச் சம்பவத்தை இந்த யாழ் நகரின் வீழ்ச்சியுடன் ஒப்பிட்டு சிங்கள வரலாற்றாசிரியர்கள் பின்வருமாறு நினைவு கூர்கிறார்கள்:

> *"15ம் நூற்றாண்டின் சபுமல் என்ற சிங்கள இளவரசனால் இந்த யாழ் நகரம் தமிழ் சக்கரவர்த்தியிடமிருந்து கைப்பற்றப்பட்டது."*

இப்படி ஆளுக்கு ஆள் பழைய பிளேட்டை திருப்பியெடுத்து தூசு தட்டுவது வெற்றிக்களிப்பில் ஏற்படும் தடுமாற்றமாகும்.

புலிகள் பேச்சுவார்த்தைக்கு வரமாட்டார்கள் என்று தெரிந்தும் புலிகளுடன்தான் பேசுவேன் என்று அவர்கள் மீது பல நிபந்தனைகள் விதித்தும், புலிகளை பேச்சுவார்த்தைக்கு ஜனாதிபதி அழைப்பதும் ஒரு இராஜதந்திர அணுகுமுறையாக இருந்தாலும், தமிழ் மக்களினுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாற்றீடாக ஒன்றும் யோசிக்காமல் புலிகளையும் இராணுவத் தீர்வையும் யோசித்துப் பார்க்கும் போக்கு வேறு விதமான சந்தேகங்களையே தோற்றுவிக்கிறது.

கிழக்கிலிருந்து யாழ்ப்பாணத் தாக்குதலுக்காக கொண்டுவரப்பட்ட இராணுவ வீரர்களுக்கு மாற்றீடாக புதிய இராணுவ வீரர்களின் சேனையை உருவாக்குவதும், அதைக்கொண்டு வன்னிப் பெரு நிலத்தில் பெருந்தாக்குதலைத் தொடர்வதும், கிழக்கில் முஸ்தீபுகளை ஏற்படுத்துவதும், கொழும்பில் புலிகளை வேட்டையாடுவதும், கடற்படை, விமானப்படை பலத்தை அதிகரிப்பதும் இன்றுள்ள முக்கியமான கடமையாக அரசுக்கு இருப்பதால் மற்ற தமிழ்க் கட்சிகளை பேச்சுவார்த்தைக்கு அழைப்பதை விட முட்டாள்களான புலிகளை அழைப்பது தான் சிறந்தவழிமுறை என்று அரசின் ஆலோசகர்கள் நினைக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை.

ஏனென்றால் அடிபட்டு ஆத்திரத்தில் இருக்கும் புலிகள் பழிவாங்கத் துடிப்பார்களேயல்லாமல் படியிறங்கி வரமாட்டார்கள்? ஆகவே புலிகளை முன்னிறுத்தி தமிழ் மக்களின் தீர்வை பின்னடிப்பதும், இந்த யுத்தத்தை தொடர்வதும் அரசின் இராணுவத் திட்டமாக இருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எது எப்படியோ சந்திரிகா அரசாங்கம் புலிகள் நாமத்தை பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு நாமம் போடாமல் இருந்தால் சரி.

●

# யாழ்ப்பாணத்தைப் புலி எப்படி இழந்தது?



## இந்திய அமைதி காக்கும் படையின் தளபதியாக விருந்த லெப்ரினன்ட் ஜெனரல் ஏ. எஸ். கல்கட் அவர்கள் டிசம்பர் மாதம் 3ம் திகதிய "த வீக்" என்ற இந்தியப் பத்திரிகைக்கு கொடுத்த பேட்டி

புலிகளின் கோட்டையான நீர்வேலியை கைப்பற்றிய சிறிலங்கா இராணுவம் புலிகளை சிதறடித்து, யாழ்ப்பாணத்தையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. "புலிகள், தம்மீது மிகவும் அதீத நம்பிக்கை கொண்டிருந்தார்கள்" 1980களின் இறுதிப்பகுதியில் இந்திய அமைதிகாக்கும் படைக்கு தளபதியாக இருந்த லெப்ரினன்ட் ஜெனரல் ஏ.எஸ்.கல்கட் அவர்கள் இவ்வாறு கூறினார்.

புலிகளின் சமீபத்திய சில தாக்குதல்களை கவனியுங்கள். பூநகரி இராணுவ முகாமை புலிகள் அழித்தார்கள். மரபுவழி முறைக்கேற்றாற்போல், அதற்கு மிக அதிக அளவிலான இராணுவத்தினர் இவர்களுக்குத் தேவைப்பட்டார்கள். அதேசமயம் மரபுவழி போர் முறையில் நிரந்தர இராணுவத்திற்கே எப்பொழுதும் அனுகூலம் அதிகம்.

ஆனால் உண்மை என்னவெனில் காட்டில் இருந்து கெரில்லாப் போரை நடாத்த வேண்டிய புலிகள் தமது பெரும்பாலான தாக்குதல்களை நிலச்சுரங்கங்களில் மறைந்திருந்து நகரங்களிலேயே நடாத்தி வந்தார்கள். இதனை இராணுவ வல்லுநர்கள் Dug in Warfare என்று கூறுவார்கள். ஆனால் எந்த ஒரு கெரில்லாவும் இப்படியான போர் முறையை தவிர்க்க வேண்டும் என்பதையே இராணுவ புத்தகங்கள் யாவும் கூறுகின்றன.

## தமக்குரிய குழியை தாமே வெட்டினர்

ஆனால் இங்கு எதிரியே வேண்டுமென்றோ அல்லது வேறு காரணத்தினாலோ பயங்கரமான புலிகளை நிலச்சுரங்கங்களில் இருக்க வழிவிட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்தின் மீதிருந்த பொருளாதாரத்தடை இந்த வருட ஆரம்பத்தில் அகற்றப்பட்டதும், அரசாங்கம் ஆயிரக்கணக்கான தொன் சீமெந்தை யாழ்நகர் அனுப்பியது. இது சிவிலியன்களுக்காக அனுப்பப்பட்டிருந்த பொழுதிலும் இதில் பெரும்பகுதியை புலிகள் பறிமுதல் செய்து தமது நிலச்சுரங்கங்களைக் கட்ட பயன்படுத்தினார்கள். ஆனால் இது இவர்களது கால்களையே கட்டிப்போடப் போகின்றது என்பதை இவர்கள் அறிந்திருக்கவில்லை.

நிலச்சுரங்கங்கள் என்பது போர்முறைகளின் ஒரு பகுதியே. ஆனால் யாழ்ப்பாண புலிகள் தம்மை ஓர் அரசாக உருவகப்படுத்திக் கொண்டரர்கள். அவர்கள் அங்கு நிர்வாகத்தை நடாத்தினார்கள்; வரிகளை அறவிட்டார்கள்; தங்களது சொந்த நீதிமன்றங்கள் மூலம் தீர்ப்புக்களை வழங்கினார்கள்; பொதுப் போக்குவரத்துக்களை நடாத்தியதுடன், சட்டம் ஒழுங்கையும் இவர்களே கவனித்தார்கள்.

புலிகளின் தாக்குதல் பிரிவுகள் படிப்படியாக தமது அரசின் பாதுகாப்பு படைகள் போன்று செயலாற்றத் தொடங்கின. இவர்களது எல்லைகள் அரண்களும் நிலச்சுரங்கங்களும் அமைக்கப்பட்டு இராணுவ நிலைகளுக்கு அருகில் இருந்தன. தமது அரண்களும், சுரங்கங்களும் கண்டுபிடிக்க முடியாதவை என இவர்கள் நம்பினார்கள். யுத்த விமானங்களுக்கெதிரான ஏவுகணைகளை கொள்வனவு செய்தவுடன் விமானக்குண்டு வீச்சுத் தாக்குதலில் இருந்தும் தாம் தப்ப முடியும் என இவர்கள் கருதினார்கள்.

## நகரமுடியாத கெரில்லா குந்தியிருக்கும் வாத்து

ஆனால் நடைமுறையில், ஒரு நிரந்தர இராணுவத்திற்கெதிரான கெரில்லாக்களின் முக்கிய தேவையான - அத்துடன் பெரிய அனுகூலமான - இடம்பெயரும் ஆற்றலை (Mobility) இவர்கள் தியாகம் செய்துவிட்டார்கள். பாரிய யுத்த தளபாடங்களை தன்னகத்தே கொண்ட ஓர் நிரந்தர இராணுவத்திற்கெதிரே நகரமுடியாத கெரில்லா என்பது குந்திக்கொண்டிருக்கும் வாத்து போன்றதே. இதுதான் நீர்வேலியிலும் நடந்தது. இது அரசபடைகளின் பாரிய தாக்குதிறனும் (Fire Power), அவர்களுக்குப் பின்பலமாக இருந்த இராணுவத் துருப்பினராலுமே இலங்கைப் படைகள் வெற்றி பெற்றன.

புலிகள் எப்பொழுதும் நிலச்சுரங்கங்களிலேயே இருந்து கொண்டிருந்தார்கள் என்பதல்ல. இவர்கள் வெளியில் சுற்றி இராணுவத்தினரைத் தாக்கிக் கொண்டுமிருந்தனர். ஆனால் அந்த நகர்வுகள் கூட ஒரு நிரந்தர இராணுவம் மிகமெதுவாக நகர்வது போலவே இருந்தது.

ஜூலை 28இல் புலிகள் ஜானகபுர, ஜயந்திபுர, கொக்குத்தொடுவாய், கொக்கிளாய் போன்ற கிராமங்களில் உள்ள இராணுவ முகாம்களை ஒரே நேரத்தில் தாக்கினார்கள். அண்மைக் காலத்தில் புலிகள் நடாத்திய பல தாக்குதல்களில் இது அவர்களின் பேரார்வம் நிரம்பிய ஒரு தாக்குதலாகும். இதற்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட தமது உறுப்பினர்களையும் திரட்டி இருந்தார்கள்.

இப்படியான பாரிய தயாரிப்புக்கு இயற்கையாகவே நீண்ட நாட்கள் பிடிக்கும். கெரில்லாத் தாக்குதல்கள் எப்பொழுதும் திடீர்த் தாக்குதல்களாக, சில கண நேரங்களுக்குள் நடப்பவையாக இருப்பதே இயல்பு. நீண்ட தயாரிப்புகள் என்பன கெரில்லாத் தாக்குதலின் அடிப்படையையே தகர்த்து விடுகின்றது. அதுதான் வெலிஓயாவிலும் நடைபெற்றது. இராணுவ உள்வறியும் பிரிவினர் 4 நாட்களுக்கு முன்னரேயே இந்த தயாரிப்புக்களைத் தெரிந்து கொண்டனர்.

தொடர்ச்சியான புலிகளின் தந்திரங்களில் ஒன்று தாக்குதல் தொடங்கிய உடனேயே மின்சாரத்தை துண்டித்து விடுவதாகும். ஆனால் இங்கு இராணுவத்தினர் உடனடியாகவே இயந்திரங்களின் மூலம் மின்சாரத்தைப் பெற்றுக்கொண்டார்கள். இத்தாக்குதலை நடாத்திய சிறிலங்கா இராணுவப்படையின் பிரிகேடியர் ஜானக பெரேரா கூறும் பொழுது 1983க்குப் பின்னர் இராணுவம் பெற்றுக் கொண்ட பாரிய வெற்றி இதுவாகும் எனக் கூறினார்.

## உத்தரவாதமளிக்க மூன்றாவது தரப்பு

புலிகளின் தவறுகளுக்கு இரு காரணங்களை கூறமுடியும். முதலாவதாக, அரசியல்

தொடர்ச்சி.... பக். 11

படிப்பகம்

www.padippakam.com



# கொடுமைகள் தாமே அழிவதில்லை



"பிரபாகரன் என்பதும், மாத்தையா என்பதும்
தனி மனிதர்களின் பெயர்கள் இல்லை
விடுதலை அவாவும் தமிழினத்துக்கு
இந்தப் பெயர்களே இனிமேல் பொருள் தரும்
இந்த முகங்கள் தனிமுகங்கள் இல்லை
உரிமைக்குப் போரிடும் இனத்தின் முகங்கள்"
- கவிஞர் இன்குலாப்
(புலிகளின் பத்திரிகையில் - நவம்பர் 1990)

தமிழ் இளைஞர்களது ஆயுத எழுச்சியில் 1993ம் ஆண்டுவரை மாவீரனாக போற்றப்பட்ட கோபால்சாமி மகேந்திரராசா என்ற மாத்தையா அவரது சகபாடிகளாலேயே துரோகி என குற்றவாளிக்கூண்டில் நிறுத்தப்பட்டார். இறுதியில் அவர் கட்டி வள்ர்த்த இயக்கத்தின் பேராலேயே அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

தமது இயக்கத்துடன் மாறுபட்ட அபிப்பிராயம் கொண்ட மாற்று இயக்க உறுப்பினர்களை மற்றும் பிரமுகர்கள் பலரை துரோகிகள் என பட்டம் சூட்டி படுகொலை செய்வதற்கு காரணமாயிருந்த-அதற்கு துணைநின்ற மாத்தையா, அதே போலக் குற்றச்சாட்டுக்கு பலியாகிப்போவேன் என்று நினைத்துக்கூட பார்த்திருக்க மாட்டார்.

"புலிகள் இயக்கத்தின் துணைத்தலைவர் மாத்தையா இந்திய அரசுடன் தொடர்பு வைத்துள்ளார் என குற்றம் சாட்டி கைது செய்யப்பட்டாரே.... மாத்தையாவை என்ன செய்தீர்கள்?" என இலங்கை வந்த இந்திய பத்திரிகையாளர் ஒருவர் கேட்டபோது, "மாத்தையா கைது செய்யப்பட்டு ஓர் ஆண்டு காலம் விசாரணை நடாத்தப்பட்டது. அவர் குற்றவாளி எனக் கண்டுபிடிக்கப்பட்டார். எனவே மரணதண்டனை விதிக்கப்பட்டது.... பிரபாகரனை கொன்று விடுதலைப்புலிகள் அமைப்பை கைப்பற்ற மாத்தையா திட்டம் தீட்டினார்...." என புலிகளின் ஆலோசகர் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்தப் பத்திரிகையாளர் கேட்கும்வரை மாத்தையாவிற்கு மரணதண்டனை வழங்கப்பட்ட செய்தியை கூட புலிகள் மக்கள் முன் பகிரங்கப்படுத்தவில்லை.

ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பகால கட்டங்களில் விடுதலை இயக்கங்கள் எந்த ஒரு நபருக்காவது மரணதண்டனை வழங்கினால், அதனை அந்த இயக்கம் உரிமை கோருவது வழக்கமாயிருந்தது. அத்துடன் தண்டனை வழங்கப்பட்டவர் இழைத்த குற்றங்களும் விவரமாக மக்கள் முன் பகிரங்கப் படுத்தப்பட்டது.

பல்வேறு சந்தர்ப்பங்களில் இக்குற்றச் சாட்டுகள் உண்மைக்கு மாறானவையாக-சோடிக்கப்பட்டவையாக இருந்தபோதும், தண்டனை வழங்கப்பட்டவர் இழைத்த குற்றம் என்ன என்பது மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும்; தாம் வழங்கிய தண்டனை நியாயமானது என்பதை மக்கள் முன் நிரூபிக்க வேண்டும் என்ற கடப்பாடு தமக்கு இருப்பதை இயக்கங்கள் நிராகரிக்கவில்லை. சிரமேற்கொண்டு செயற்பட்டன.

ஆனால் போராளிகள் தமக்கு தாமே வகுத்துக் கொண்ட இந்த ஒழுங்குவிதி படிப்படியாக மீறப்பட்டது. சித்திரா அச்சகத்தில் போராளி சுந்தரம் புலிகளால் படுகொலை செய்யப்பட்டபோது குற்றங்களைப் பட்டியலிட்டு துண்டுப்பிரசுரம் ஒன்றை வெளியிட வேண்டும் என்று புலிகளுக்கு இருந்த தேவை, கட்டாயம் இன்று மாத்தையாவை தூக்கிலிடும் போது இல்லாமல் போனது எவ்வாறு என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஒரு சமூகவிரோதிக்கு தண்டனை வழங்கப்படுவதாயினும் மக்களின் அங்கீகாரம் அவசியம் என்ற கருத்து மேலோங்கி இருந்த எமது போராட்டத்தில், ஏறத்தாழ 15 ஆண்டு காலம் தான் சார்ந்த அரசியலுக்காக பொது வாழ்வில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட மாத்தையாவிற்கு நேர்ந்த கதி-படுகொலை செய்யப்பட்டவிதம் எமது போராட்டம் எந்தளவிற்கு திசைமாறி சென்றுள்ளது என்பதற்கு உதாரணம்.

> சக போராளி இயக்கங்களையும், இனவெறி பிடித்து சிங்கள சிவிலியன்களையும், அப்பாவி முஸ்லீம்களையும், புலிகளை விமர்சித்த யாழ் பிரமுகர்களையும் கொன்றொழித்து ஆயிரக் கணக்கானோரை சிறையிலடைத்து சித்திரவதை செய்துவரும் புலிகளின் பாசிஸத் தன்மையை நாம் அம்பலப்படுத்திய போது, புலிகளின் துதிபாடிகள் இதை துரோகிகளுக்கு எதிரான மரண தண்டனையாகச் சித்தரித்தனர். ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து கடைசியில், தனது அமைப்புக்குள்ளேயே தனது சகாக்களையே கைது செய்து கொன்றுவிடத் துடிக்கிறது பிரபாகரன் கும்பல். புலிகள் இயக்கத்தினுள் கருத்து வேறுபாடோ, கோஷ்டிப் பூசல்களோ ஒருபோதும் கிடையாது என்று புலிகளின் துதிபாடிகள் காதில் பூசுற்றி வந்தார்கள். அத்தனையும் பொய் என்று இப்போது வீதிக்கு வந்து நாறத் தொடங்கி விட்டது. பாசிஸ பிரபாகரன் கும்பலோ, மாத்தையா கும்பலோ ஈழமக்கள் விடுதலை பெற ஒருபோதும் உதவ முடியாது. தமது அதிகாரப் பூசலுக்காக ஈழமக்களைக் காவு கொள்ளவே அவை முயலும்.
>
> - புதிய ஜனநாயகம் (15 பிப். 1994)

மாத்தையாவிடம் விசாரணை நடத்தப்படுகிறது என்று தமது நடவடிக்கைக்கு எதிராக பொதுஜன அபிப்பிராயம் திரண்டுவிடாதபடி, இயக்கத்திற்குள்ளேயே அதிருப்திகள் தலை தூக்காதபடி சமாளித்து வந்த புலிகள் தருணமறிந்து இரகசியத்தைக் கசியவிட்டிருக்கிறார்கள்.

இன்று யுத்தத்தினால் அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் சமூகத்திற்கு மாத்தையா ஒரு பொருட்டாய் தெரியவில்லை. 'மாமி உடைத்தால் மண்குடம்' என்ற மனப்பாங்குடன் எழுதிவரும் தமிழ் பத்திரிகைகளும் நழுவிக்கொள்ள இது நல்ல சந்தர்ப்பம்.

புலிகள் இயக்கத்திற்குள்ளேயும் பொறுப்புக்களை ஏற்றிருக்கும் புதிய முகங்களுக்கு-புதிய ஊழியர்களுக்கு மாத்தையா படுகொலை செய்யப்பட்டதாய் படாது. மேலும் புலிகள் பெற்ற இராணுவ வெற்றிகள், இன்று எழுந்துள்ள புதிய நெருக்கடிகள் மாத்தையா பிரச்சினையின் தீவிரத்தை தணியச் செய்து விடும்.

புலிகள் இயக்கத்தின் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவரான மாத்தையா, புலிகள் இயக்கத்தின் வளர்ச்சிக்கு காத்திரமான பங்காற்றினார். ஆனால் ஏறிவந்த ஏணியையே எட்டி உதைப்பதுதான் பிரபாகரனின் வரலாறு. புலிகள் தான் தொடர்ந்து போராடுகிறார்கள்.... புலிகளால்தான் நாங்கள் தலை நிமிர்ந்து வாழுகிறோம் என்று வாதிடுபவர்களும் இதுவிடயத்தில் மாத்தையாவின் பங்கை மறந்துவிட்டார்கள் என்பதுதான் பரிதாபம்.

மாத்தையா மரணதண்டனைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதனால் - கடும் கண்டனங்களுக்கு இலக்கான, விமர்சனத்துக்குள்ளான புலிகளின் கடந்தகால நடவடிக்கைகள் அனைத்தும் இனி மாத்தையாவின் தலையில் சுமத்தப்படும். ஐயமில்லை.

மாத்தையா அத்தகைய குற்றச் சாட்டுகளுக்கு அப்பாற்பட்ட புனிதர் என்பதில்லை. புலிகளின் அத்தனை அடாவடித்தனங்களிலும் அவருக்கும் பாரிய பங்குண்டு.

ஈ.பி.ஆர்.எல்.எப். இன் வவுனியா பிரதேச தளபதியாயிருந்த தோழர் றேகன் மாத்தையாவின் சூழ்ச்சிக்கு பலியாகியவர்களில் ஒருவர். வவுனியாவில் உள்ள அரிசி ஆலை ஒன்றில் கொள்ளையிட முயன்றதாக சோடித்து றேகனின் படுகொலையை நியாயப்படுத்தியவர், அப்போது வன்னிப் பகுதியில் புலிகளுக்கு தலைமை தாங்கி நின்ற மாத்தையா. பேச்சுவார்த்தைக்கு வருமாறு அழைக்கப்பட்ட தோழர் றேகன் கைது செய்யப்பட்டு சமூக விரோதி எனப் பட்டம் சூட்டி படுகொலை செய்யப்பட்டார்.

மாத்தையா, தானே வகுத்து செயற்படுத்திய தந்திரத்திற்கு - வஞ்னைக்கு இன்று தானே பலியாகிப் போனதில் ஆச்சரியம் இல்லை. இங்கு நான் குறிப்பிடுவது அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்பதில்லை. நாமே வகுத்துக்கொள்கின்ற- வளர்த்து விடுகின்ற தீய வழிமுறைகள் நம்மையே பலிகொள்ளும் என்பதையே.

புலிகள் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தின் மீது தாக்குதல் தொடுத்த வேளையில், 'ஈ.பி. ஆர்.எல்.எப். புலிகளை அழிப்பதற்கு திட்டமிட்டது. அதனால் நாம் முந்திக்கொண்டோம்' என தமிழ் பொது மக்களிடம் புலிகள் கூறிவந்தனர். அவ்வாறே பிரபாகரனை கொன்று விடுதலைப்புலிகள் அமைப்பை கைப்பற்ற திட்டம் தீட்டினார் என்று அதே போன்ற ஒரு குற்றச்சாட்டை மாத்தையாமீது சுமத்தி கொன்றொழித்துள்ளார்கள். எனவே புலிகளின் கூற்றில் உள்ள கபடத்தனத்தை ஏனையோரை விடவும் எம்மால் நன்கு புரிந்து கொள்ள முடியும்.

மாத்தையா உண்மையிலேயே பிரபாகரனைக் கொல்லச் சதி செய்த காரணத்திற்காகவே அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதாயின், புதிய வரலாற்றுச் சூழ்நிலையில்-ஜனநாயக வடிவத்தில் போராட்டத்தை முன்னெடுப்பதற்காக உருவாக்கப்பட்டதாக புலிகளால் தெரிவிக்கப்பட்ட 'விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி' என்ற புலிகளின் அரசியல் பிரிவு ஏன் முடக்கப்பட்டுள்ளது?

மட்டக்களப்பில் வாகரை என்னுமிடத்தில் 24.02.90 தொடக்கம் 01.03.90 வரை ஐந்து நாட்கள் மாநாடொன்றை நடாத்தி, இன்று மாத்தையாவின் படுகொலையை நியாயப்படுத்திக் கொண்டிருக்கும் புலிகளின் ஆலோசகர் பாலசிங்கம் உட்பட முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டு கொள்கை வகுத்து, அமைப்பு விதியொன்றை உருவாக்கி தீர்மானங்கள் மேற்கொண்ட 'விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி' என்ற அரசியல் கட்சியை ☞

குலுக்கிய கரங்களால் கொலை செய்யும் மாவீரம்!



மாத்தையாவும் பொட்டம்மானும்

# படுகொலைகளும் பத்திரிகைச் சோதப்பல்களும்

ஹென்றி லூஸ் இந்த இருபதாம் நூற்றாண்டின் அசாத்தியச் செல்வாக்கு பெற்ற பத்திரிகை அதிபர்களில் ஒருவர். 'டைம்' பத்திரிகையைத் தோற்றுவித்தவர். இரண்டாம் உலக யுத்தத்தின்போது செய்திப்படப் பிரிவு ஒன்றை -'மார்ச் ஆஃப் டைம்' - ஏற்பாடு செய்தவர். இன்று ஹென்றி லூஸின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்கும்போது பல விஷயங்கள் தெரிகிறது. 'டைம்' பத்திரிகை உலகப் பிரச்சினைகள் பலவற்றை முன்வைத்திருக்கின்றது; ஆனால் ஐரோப்பாவில் ஹிட்லரும் நாஜிகளும் லட்சக் கணக்கில் கொடூரமாகக் கொன்று குவித்த யூதர்களைப் பற்றி வெகுகாலம்மௌனமாக இருந்திருக்கிறது. செய்திப்படமும் அதே கொள்கையைப் பின்பற்றியிருக்கிறது. செர்பியர்கள், ரஷ்யர்கள் மீது ஜேர்மனி நிகழ்த்திய சித்திரவதையையும் படுகொலையையும் பற்றி அடிக்கடி சித்தரித்த செய்திப்படம், லட்சக்கணக்கான யூதர்கள் போலந்திலும் மற்றும் இதர முகாம்களிலும் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டதை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளவில்லை. அமெரிக்காவின் இதர பிரசுர சாதனங்களில் இவை வெளிவந்த போதிலும் அமெரிக்கப் பொதுமக்களின் கவனத்தில் பதியவில்லை. பல லட்சம் யூதர் படுகொலை செய்யப்பட்டிருந்தபோதும், யுத்தம் முடிவதற்கு ஓராண்டு முன்பு - அதாவது 1944ல் கூட அமெரிக்கப் பொதுமக்களில் பதினைந்து சதவீதத்தினரே நாஜிகள் கைதி முகாம்களில் படுகொலை நிகழ்த்தப்படுகிறது என்று எண்ணினார்கள். 'டைம்' பத்திரிகையில் முதன்முதலாக யூதப் படுகொலை பற்றிக் கட்டுரை வந்த நாளில் (21.08. 1944) நாஜிகள் 50 லட்சம் யூதர்களை இந்தப் பூமியிலிருந்து நிரந்தரமாக அகற்றியிருந்தார்கள்.



'டைம்' பத்திரிகை வேறு எவ்வளவோ பத்திரிகைகள்போல உயர்ந்த லட்சியங்களை கொண்டு தான் நிறுவப்பட்டது. அது அபரிமிதமான செல்வாக்குப் பெற்றது, அதன் லட்சியங்களின் பிரதிபலிப் பால்தான். ஆனால் அதன் யூதத் துவேசம் இந்த நூற்றாண்டின் ஒரு மிகப்பெரிய கோரமான, சோகமான பகுதியை அதன் பார்வையிலிருந்து மறைத்துவிட்டது. 'டைம்' பத்திரிகை 1940 அல்லது 1941லேயே ஜெர்மானியர் கையில் யூதர்கள் படும் இன்னல் பற்றிக் கடுமையாக குறிப்பிட்டிருந்தால் பல லட்சம் யூதர்கள் உயிர் தப்பியிருக்க முடியுமோ என்றுகூட நினைக்க இடமிருந்திருக்கிறது.

- அசோகமித்திரன்

நன்றி: சுபமங்களா - டிசம்பர் 1995.

www.padippakam.com



# புலிகள் சாதனையாளர்கள்தான்.... நாசமறுப்பதில்!

- மு. கணேசகுமார்



உலக நிகழ்வுகள் தேசங்களை ஒன்று படுத்துகையில் பிரிவினைக்கான கோஷங்கள் பலவீனமடைந்துள் ளன. அதேபோல் அரசியல் ரீதியான கருத்து வேற்றுமைகள் ஆயுதங்களினால் தீர்வை எட்டும் போக்கும் தோல்வியையே தழுவுவதைக் காணமுடிகின்றது.

இஸ்ரேல் பாலஸ்தீனப் பிரச்சினை, தென்னாபிரிக்காவின் இனவெறி ஆட்சி அமைப்பு, பிரிட்டிஷ்-அயர்லாந்து நெருக்கடிகள் அனைத்தும் அண்மைக்காலத்தில் தெளிவுபடுத்துவதானது, பேச்சுவார்த்தைகளினாலான அமைதியின் வெளிப்பாடுகளையே ஆகும். பொஸ்னியத் தகராறும் அந்த வழியிலேயே செல்கின்றது என்பது வேற்றுமையில் ஒற்றுமையைப் பேச்சுவார்த்தைகளே உருவாக்கும்; ஆயுதங்களல்ல என்பதை நிரூபிப்பதாகத்தானிருக்கிறது.

## அழிவுகளைக் குவிக்கும் புலித் தமிழுணர்வு

சிங்கள இனவாதமும் புலிகளின் பாசிசவாதமும் வேறுபடுத்திப் பார்க்கக் கூடியதாக இருந்தாலும், அடிப்படையில் தேசத்துக்கும் மக்களுக்கும் எதிரான தன்மையையே கொண்டுள்ளன. சமாதானத்திற்கும், அமைதிக்கும், ஐக்கியத்திற்கும் இனவாதிகளும் புலிகளும் என்றுமே தடையானவர்கள். இவர்களை ஓரங்கட்டாமல் சமாதானத்தை உருவாக்க நினைப்பவர் இவர்களுக்குத் துணைபோகின்றவர்களாகத்தான் நிச்சயமாக இருக்கமுடியும். வியாதி தெரியாமல் மருந்து கொடுப்பது எப்படியோ அதுபோல முட்டாள்தனமே இதுவாகும்.

புலிகளுக்கு எதிராகப் பேசுவதென்பது தமிழ் மக்களுக்கு எதிராக செயற்படுவது போன்றதாகும் என தமிழ்ச் சமூகத்தில் சிலரிடையே பரவலான கருத்துண்டு. இது இன ரீதியான ஈர்ப்பாலன்றி அறிவுரீதியாகத் தோன்றிய ஒன்றல்ல. மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவது போன்ற மூடத்தனமாக செயலில் தமிழ் மக்களைச் சிக்க வைக்கப் பலர் முற்படுவது தெரிந்த ஒன்றே.

1990இற்குப் பின் புலிகளின் மூன்றாம் கட்ட ஈழப் போர் ஆரம்பித்ததில் தொடங்கி இன்றுவரை புலிகள் சாதித்ததென்ன?

## 1. புலிகள் தோண்டிய புதைகுழி

பிரேமதாசாவுடன் கூட்டுச்சேர்ந்து தமிழ் மக்களுக்கு எதிராகச் சதி செய்து இந்தியப் படையை வெளியேற்றியதுடன், மாகாண அரசைக் கலைத்ததும்.

1987இல் நடந்த வடமராட்சி தாக்குதலான ஒப்பரேசன்லிபரேசன் இராணுவ நடவடிக்கை மூலம் இலங்கை அரசு யாழ்குடாநாட்டைக் கைப்பற்ற நினைத்தபோது, இந்தியத் தலையீட்டால் அது தடுக்கப்பட்டு இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு அமைதிப்படையாக இந்திய இராணுவம் வந்திறங்கியது.

அன்றைய காலகட்டத்தில் இடைக்கால அரசு தொடர்பான பிரச்சினையில் பெரும்பான்மை ஆசனங்களைத் தங்களுக்கே விட்டுத்தரும்படி இந்திய, இலங்கை அரசுகளுடன் அதிகார வெறியுடன் மோதுண்டு, அது சரிவராத நிலையில் ஆத்திரங் கொண்ட பிரபாகரன், ஆயுதம் தடைசெய்யப்பட்ட பகுதியில் கடலில் ஆயுதங்களுடன் சென்ற குமரப்பா, புலேந்திரன் குழுவினர் கைது செய்யப்பட்ட சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இந்தியப்படைகளுக்கு எதிராக யுத்தத்தை ஆரம்பித்தார்.

எந்தவொரு நெருக்கடியையும் பகை முரண்பாட்டுடன் தீர்த்துக்கொள்ளும் வழக்கம் பிரபாகரனால் புலிகள் மத்தியில் வளர்த்துவிடப்பட்டுள்ளது தெரிந்தவொன்றே. இதனால் ஏனைய இயக்கங்களையும் புலிகள் தடைசெய்தது, அதன் விளைவுதான் இன்றைய அவலம். இந்தியப் படைகளுக்கு எதிரான யுத்தமே சமாதானத்திற்கு, அமைதிக்கு தோண்டப்பட்ட புதைகுழியாகும். அதைப் புலிகளின் வீரமாகக் கருதியவர்கள் இன்று அனுபவிப்பதென்ன?

## 2. பிழைக்கப் போவது புலிகளின் கணக்கே

புலிகள் இல்லாமல் எந்தவொரு இயக்கத்தாலும் தமிழ் மக்களுக்கான சமாதானத்தை ஏற்படுத்த முடியாது என நினைத்தவர்கள் மத்தியில், பலவித தியாகங்களுக்கு ஊடாக மாகாண அரசை ஈ.பி.ஆர்.எல்.எப். உம் ஏனைய சில கட்சிகளும் உருவாக்கின. அப்போது அஞ்சியோடியவர்கள் இன்று வீரம் பேசுகின்றனர்.

மாகாண அரசு உருவாக்கம் சாதாரணவொன்றல்ல. பல தோழர்களினதும் மக்களினதும் தியாகங்களின் மீதே அது உருவானது. வடகிழக்கிற்கான அரசியல் தலைமைத்துவம் இன்று இல்லாது போனாலும் வட-கிழக்குக்கென ஓர் நிர்வாகம் ஸ்தாபிக்கப்பட்டு அது இன்றும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. பல ஆயிரக்கணக்கானோர் இன்றும் வேலை செய்து கொண்டிருக்கின்றனர்.

பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் திட்டமிடப்பட்டும் அதற்கான கால அவகாசம் கிடைக்காமலும் புலி-பிரேமதாசா கூட்டுச் சதியாலும் தடைபட்டுப்போனது. மக்களுக்காகச் செய்ய முயன்ற பலவிடயங்கள் வெளிச்சத்துக்கு வராமல் போனதும் உண்டு.

> எமது தலைவர் பிரபாகரன் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் மட்டுமல்ல; அடக்குமுறைக்கு எதிராகப் போராடும் ஓர் தேசிய இனத்தின் தலைவர். இன்று விடுதலைக்காகத் தம்மைத் தியாகம் செய்யத் தயாராக நிற்கும் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கும், எமது ஆதரவாளர்களுக்கும் மட்டும் அவர் தலைவர் அல்ல. எம்மீது அதிருப்தி கொண்டவர்களுக்கும், எம்மை எதிர்ப்பவர்களுக்கும் அவர் தலைவர் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். தப்புச் செய்தவன், செய்யாதவன் அனைவர்க்கும் அவர்தான் தந்தை. பாதிக்கப்பட்டவனுக்கும், படாடோபமாக வாழ்பவனுக்கும் அவர்தான் தந்தை.
>
> - கிட்டு நினைவு மலரில்

புலிகள் யாழ் குடாநாட்டில் ஓர் நிழல் அரசை உண்டுபண்ண முயற்சித்து, அதற்காக சட்டரீதியற்ற முறையில் காவல்துறை, நீதித்துறை போன்றவற்றை உருவாக்க முற்பட்டனர். அது கேலிக்கிடமானது இன்றைய நிகழ்வாகும். ஆனால் மாகாண அரசு காலகட்டத்தில் சட்டரீதியாக குடிமக்கள் தொண்டர்படை (CVF) என்னும் பெயரில் இலங்கை அரசின் ஒத்துழையாமைக்கு மத்தியில் மிகவும் சிரமப்பட்டு மாகாணப் பொலிசை உருவாக்கினோம். பல குடியேற்றங்களை வட-கிழக்கில் தடுத்தோம்.

இன்றோ அம்பாறை மாவட்டத்தில் எத்தனையோ தமிழ் கிராமங்கள் ஆக்கிரமிப்புக்குள்ளாகி உள்ளது 1990இற்குப் பின். புலிகளால் இவற்றை மீட்க முடியுமா? திருமலையில் தமிழ் மக்கள் பீதியற்ற நிலையில் வாழ்ந்த காலத்தை உருவாக்கித் தரமுடியுமா? பல இராணுவ, அதிரடிப்படை முகாம்கள் மாகாண அரசால் வெளியேற்றப்பட்டன. இன்று முழத்துக்கு முழம் வட-கிழக்கில் முகாம்களும், காவல் பரிசோதனை நிலையங்களும் உள்ளன. இவற்றை இல்லாது ஒழிக்க புலிகள் என்ன செய்யப் போகின்றனர்?

குடியேற்றங்களை நிறுத்த புலிகளின் அணுகுமுறை (சிங்கள மக்களைக் கொல்வது) சரிவருமா? இலங்கைப் பொலிசாருக்கும் இராணுவத்தினருக்கும் மாகாணசபைக் காலகட்டத்தில் வேலையே இல்லாது இருந்தது. மாகாண அரசு காலகட்டத்திலும் சில நடைமுறைப் பிரச்சினைகள் இருந்தன. அவற்றுக்கு புலிகளே காரணம் என்பதையும் விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

அகதி வாழ்வும் அவலங்களும் அன்று இருந்தனவா? யாழ்குடாநாட்டை விட்டு இலட்சக்கணக்கில் மக்கள் வெளியேற்றப்பட்டு ஓடினரா? (இரண்டு மணி நேரத்தினுள்)

புலிகள் நிராகரித்த மாகாண அரசை மக்கள் இன்றும் நிராகரிக்கவில்லை. புலிகள் நிராகரிக்கும் இலங்கை அரசில் எத்தனையோ ஆயிரம் பேர் தமிழ் மக்கள் இன்றும் வேலை செய்கின்றார்கள். அரச கொடுப்பனவும் நிவாரணமும் மக்களால் ஏற்றுக்கொள்ளப் படுகின்றது. வட-கிழக்கிற்கு வெளியே எத்தனையோ தமிழ் மக்கள் சிங்கள மக்களுடன் இணைந்து வாழத்தான் செய்கின்றனர்.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளதைவிட அதற்கு அப்பாலும் புலிகளின் பாதுகாப்பில்லாமல் மக்களால் வாழமுடிகின்றதைப் புலிகள் இனியேனும் ஏற்றுக்கொள்வார்களா? பிழைக்கப்போவது புலிகளின் கணக்கே.

இன்றும்கூட எந்தத் தீர்வும் மாகாண அரசின் அடிப்படையிலேயேதான் இருக்கும் என்பதை யாரும் மறுக்கமுடியாது. அன்று நாம் போட்ட கணக்கே சரியானது என்பதைப் பலர் ஏற்றுக்கொள்ள வெட்கப்பட்டாலும் அதுவே உண்மை.

## 3. வரலாற்றுத் துரோகம்

இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியைக் கொலை செய்ததன் மூலம் புலிகளின் உண்மைச் சொரூபம் உலகளவில் வெளிப்பட்டதும் தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்தின் நியாயாதிக்கம் அழிக்கப்பட்டதுமாகும்.

தமிழ் மக்களுக்கென இருந்த பலமான பின்புலமான இந்தியாவை இழந்துவிட்டதும் அரசியல் ரீதியான பின்னடைவாகும். இன்று தமிழ் மக்களின் பிரச்சினை உலக அளவில் கண்ணுக்குத் தெரியாதவொன்றாகப் புலிகளால் ஆக்கப்பட்டதன் மூலம் புலிகளின் துரோகம் வரலாற்றில் என்றும் மாறாது.

## 4. இனங்களுக்கிடையே புரிதலைக் குழப்புதல்

சிங்கள முஸ்லீம் அப்பாவி மக்களைக் கொல்வதன் மூலம் இனங்களிடையே பதட்டத்தையும் பாதுகாப்பின்மையையும் உருவாக்கி, இன முரண்பாட்டைத் தோற்றுவித்து, தொடர்புள்ள பிரதேசங்களை ஆயுதமயப்படுத்திக் குளிர்காய்வது. இதன் மூலம் ஒட்டுமொத்தமான தமிழ் மக்களை தவறான கோணத்தில் ஏனைய இனங்களுக்குப் புரியவைத்தல்.

புலிகள் செய்யும் இச்செயலுக்கு எதிரானவர்களாக தமிழ் மக்கள் அனைவரும் இருந்தாலும் புலிகளுக்கு எதிராகத் தாக்குதல் தொடுக்க முடியாதவர்களாகும்போது, ஏனைய இன மக்கள் தமிழ் மக்களின் மௌனத்தைப் பிழையான புரிதலில் அர்த்தப்படுத்திக் கொண்டு விரோதிகளாகப் பார்த்தல். இது புலிகளுக்குச் சாதகமாகப் போகின்றது.

## 5. புலிச் சிறைப் பிடிக்குள் மக்கள்

குருட்டுத்தனமான அரசியல் பார்வையினூடாக மக்களை மாயைக்குள் வைத்துக் கொண்டு இன அழிப்பை மேற்கொள்கின்றனர். அனைத்துத் தமிழ் மக்களையும் சமாதானத்தின் எதிரிகளாகவும், தங்களுடையவர்களாகவும் அனைத்துலகுக்கும் வெளிக்காட்ட முயல்கின்றனர். கற்றோர்களினது கருத்துச் சுதந்திரம், பேசும் சுதந்திரம் போன்றவற்றைத் தங்களுக்கு சாதகமாகச் சொல்லுமாறு நிர்ப்பந்திக்கின்றனர்.

தொடர்ச்சி 11

> முரண்பட்ட அரசியல் கருத்துக்களை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் எப்படி எதிர்கொண்டு வந்துள்ளது? ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத் தலைவர்களின் உயிர்கள் சென்னையில் பறிக்கப்பட்டதே இந்த வினைவுக்குத் தகுந்த பதிலாகும். உலக அரங்கிலும், தெற்கு ஆசியச் சூழலிலும் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் இலங்கை அரங்கிலும் முக்கிய மாறுதல்களை உருவாக்கியுள்ளது. நவீன தளவாடங்களைப் புதிதாகப் பெற்றுள்ள இலங்கை ராணுவத்தின் தாக்குதல் திறனும் வளர்ந்துள்ளது. இந்தப் பின்னணியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போக்கில் மாறுதல் வேண்டும் என்ற சிந்தனையைக் கூட முளையிலேயே கிள்ளும் முயற்சியாகவே மாத்தையா கைது, விசாரணை ஆகியவை அமைந்துள்ளன என்ற கருத்து வலுப்பெற்று வருகிறது. சட்டப்படியான நடைமுறை என்ற பிரிட்டிஷ் தந்திரமும், அதற்கு வலுவூட்ட வேற்று நாட்டுப் பொலீசுடன் கூட்டுச் சதி என்ற தந்திரமும் இன்னும் பல காலம் அரசியல் இயக்கங்களின் உத்தியாக அமையக் கூடும்.
>
> - தினமணிக் கதிர் (ஜனவரி 1994)

(6ம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய தமிழ் அரசியல் இயக்கங்களை புலிகள் தடை செய்தது போலவே தடைசெய்திருப்பது ஏன்? இதுபற்றி நிதானமாக சிந்திப்பவர்களுக்கு மாத்தையா படுகொலை செய்யப்பட்டதன் உள்நோக்கம் துலங்கும்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவராயிருந்த மாத்தையா சதி முயற்சியிலீடுபட்டார் துரோகமிழைத்தார் அவருக்கு தண்டனை வழங்கப்பட்டது நியாயம் என எடுத்துக்கொள்வோம். அதே அரசியல் கட்சியின் துணைத்தலைவர் கரிகாலன், அமைப்பாளர் திருமதி பாலசிங்கம், செயற்குழு உறுப்பினர் ஆஞ்சநேயர் போன்ற பலர் இன்னும் புலிகள் அமைப்பில் முக்கிய பிரமுகர்களாயிருந்த போதும், அரசியற்கட்சி செயற்பாட்டுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அரசியல்கட்சியின் நடவடிக்கைகள் மூலமாக பொதுமக்களுடன் நெருக்கமாக தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்ட மாத்தையா, மக்கள் மத்தியில் பிரபல்யம் அடைய தொடங்கினார். எப்போதும் தலைமறைவாகவே வாழ்ந்துவரும் பிரபாகரனால் அந்த அளவிற்கு சாதாரணமக்களை நெருங்கிச் சென்று அவர்களின் நன்மதிப்பை பெற முடியவில்லை.

தனக்குச் சமமாக அரசியலில் பிரகாசிப்பதை-பிரபல்யம் பெறுவதை விரும்பாத பிரபாகரனுக்கு, மாத்தையா தனது இயக்கத்தை சேர்ந்தவராயினும் சகித்துக்கொள்ள முடியவில்லை. பிரபாகரனின் இந்த மனோபாவம் தான் மாத்தையாவின் உயிருக்கும்உலைவைத்ததே அல்லாமல் துரோகம் இழைத்ததாகவும், சதி முயற்சியில் ஈடுபட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டது புனைகதை. சுத்தப் பொய்.

புலிகள் இயக்கம் பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தி படுகொலைகளை மேற்கொண்டபோது, மாத்தையாவும் அதற்கு துணைநின்றவர். அவற்றை தட்டிக்கேட்க முனைந்தவர்களை அடக்கி ஒடுக்குவதில் முன்நின்றவர்.

எனவே இன்று அவருக்கு இழைக்கப்பட்ட அநீதியை எதிர்த்து குரல் எழுப்புவதற்கும் யாரும் இல்லாமல் போனதில் வியப்பில்லை. ஆனால் இந்த அனுபவங்கள் எமது மக்களுக்கு கற்றுக் கொடுக்கும்! கொடுமைகள் தாமே அழிவதில்லை என்று சிந்திக்கவும் தூண்டும்!

விதுரன்

படிப்பகம்

www.padippakam.com



# புலிகளின் தாகம்? தமிழீழமா? தனி அதிகாரமா? தமிழ் மக்கள் அழிவா?



சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை ஆரம்பித்ததன் பின்னர் புலிகள் பொதுமக்களுடன் எவ்வாறு நடந்துகொண்டார்கள்? மக்களின் உயிர் உடமைப் பாதுகாப்பு விடயத்தில் எவ்வாறு நடந்து கொண்டார்கள்?

தமது உடமைகளை விட்டுவிட்டு உடனடியாகவே வெளியேறும்படி கட்டளை பிறப்பிக்கப்பட்டது. வெளியேற மறுத்தவர்களுக்கு பச்சைமட்டையால் அடியும் கிடைத்தது. திரும்பவும் தமது வீடு வாசல்களுக்கு திரும்பலாம் என்ற நம்பிக்கையுடன் கோயில்களிலும் பாடசாலைகளிலும் தங்கியிருந்தவர்கள்கூட வெளியேறும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். சித்தங்கேணி, மானிப்பாய், சுன்னாகம் போன்ற பகுதிகளில் துப்பாக்கிப் பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டன. இத்தகைய சம்பவங்களில் பாடசாலை அதிபர்கள் உட்பட பலர் இறந்த சம்பவங்களும் உண்டு.

## மக்கள் எனப்படுவோர் மாவீரர் குடும்பத்தினரே!

அவ்வாறு உடுத்த துணியுடன் வெளியேறிய மக்களில் ஒருபகுதியினரின் பொருட்கள் புலிகளால் அபகரிக்கப்பட்டன. அவ்வாறு உடுத்த துணியுடன் வெளியேறியவர்கள் கைவசம் வைத்திருந்த நகைகளை தம்மைத் தவிர யாருக்கும் விற்கக்கூடாது என புலிகள் ஆணை பிறப்பித்தார்கள். தவித்த முயல் அடித்த கதையாக அடிமாட்டு விலை 1500 ரூபாவுக்கு மக்களிடம் நகை வாங்கினார்கள்.

தென்மராட்சிக்கும், கிளிநொச்சிக்கும் என இடம்பெயர்ந்த மக்களில் எல்லோரையும் பாரபட்சமின்றி அவர்கள் நடாத்தவில்லை. தமது மாவீரர் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இருப்பிடங்கள் வழங்குவதில் முன்னுரிமை அளித்தார்கள். எல்லோரும் அகதிகளான பின்னரும் இவர்கள் இவ்வாறுதான் நடந்து கொண்டார்கள்.



## ஆட்சேர்ப்பில் புலிகளும் அலைச்சலில் மக்களும்

இவ்வளவு துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்த வேளையில், அகதிகளான மக்களின் பிள்ளைகளை குறிப்பாக சிறுவர்களை யுத்தத்திற்கு அணிதிரட்டினார்கள். அவர்களுடன் சேர விரும்பாதவர்களை தாய்ப்பாலா நாய்ப்பாலா அருந்துகிறீர்கள் என்று கேட்டு மனிதனின் பலவீனமான உணர்ச்சிகளைத் தட்டிவிட்டார்கள். ஆட்கள் பெரிதாகச் சேராத நிலையில் வீட்டுக்கொருவர் கட்டாயம் புலிகளில் இணைய வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்கள்.

தமது உற்றார் உறவினரை, உடமைகளை விட்டு வந்தவர்கள் சுமார் 1000 பேர் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல முயன்றபோது, அவர்கள் யுத்தத்திற்கு 500 பேரைச் சேர்த்துக் கொடுத்துவிட்டுச் செல்லும்படி கேட்கப்பட்டார்கள். தென்மராட்சிப் பகுதியிலிருந்து குருநகர்ப்பகுதிக்கு வள்ளங்கள் மூலம் தப்பிச் செல்ல முயன்றவர்கள் சிலர் புலிகளால் கைது செய்யப்பட்டார்கள். அவர்களில் சிலர் கொல்லப்பட்டுவிட்டதாகவும், இன்னுமொரு பகுதியினர் மந்திகை வைத்தியசாலையில் கைகால்கள் முறிக்கப்பட்ட நிலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் அறியமுடிகிறது.

தற்போது தென்மராட்சி, வடமராட்சிப் பகுதியில் தங்கியிருக்கும் மக்களையும் புலிகள் வன்னிப் பெருநிலப் பகுதிக்கு நகர்ந்துவிடுமாறு நிர்ப்பந்தித்து வருகின்றார்கள். அகதிகளான மக்களின் பயணங்கள் இன்னும் ஓய்ந்தபாடில்லை. இதற்கிடையே கிளாலிப் பாதையையும் தடைசெய்யப்பட்ட பகுதியாக அரசு அறிவித்துவிட்டது.

## அகதிகளாய் விரட்டியது அவர்களைப் பாதுகாக்க...?

இனிமேல் அனுபவிப்பதற்கு எதுவுமில்லை என்றளவிற்கு மக்கள் துன்பங்களை அனுபவித்து விட்டார்கள். இதற்கிடையே சில முக்கியமான மாற்றங்கள் தென்படுகின்றன.

யுத்தத்திற்குச் சிறுவர்களை இணைப்பதையும், பலாத்காரமாக ஆட்களைச் சேர்ப்பதையும் ஆங்காங்கே மக்கள் எதிர்த்துள்ளார்கள். தென்மராட்சி வடமராட்சியிலிருந்த மக்களை வன்னிப் பெருநிலப்பரப்புக்கு வெளியேறுமாறு புலிகள் பலவந்தப்படுத்துவதையும் மக்கள் எதிர்த்துள்ளார்கள்.

அவசர காரியங்களுக்காக வெளியிடங்களுக்கு செல்பவர்களுக்கான 'பாஸ்' அனுமதியும் 21.11.95 இலிருந்து நிறுத்தப்பட்டிருப்பதாலும் மக்களுக்கும் புலிகளுக்குமிடையே பிரச்சினைகள் உருவாகியுள்ளன.

புலிகள் மக்களைப் பாதுகாப்பதற்காகவே மக்களை வெளியேறுமாறு கேட்டுக்கொண்டார்கள் என்பது தவறான பிரச்சாரமாகும். உண்மையில் இராணுவத்தைத் தாக்கும்போது இராணுவம் மக்களைத் தாக்கும்; அப்போது மக்கள் தம்மை நோக்கி வருவார்கள் என்ற அடிப்படையிலேயே புலிகள் செயற்பட்டு வந்திருக்கிறார்கள். பல இடங்களில் மக்களை கவசமாக வைத்தும் தாக்குதல்களை நடாத்தி இருக்கிறார்கள்.

எல்லைக்கிராமத் தாக்குதல்கள், கொழும்பில் மேற்கொண்ட தாக்குதல்களின்போது கூட பாதுகாப்பற்ற சூழ்நிலையில் வாழும் தமிழ் மக்களைப் பற்றி சிறிதளவும் கவலைப்படவில்லை. அத்தகையோர் இப்போது மக்களின் பாதுகாப்பிற்காக மக்களை வெளியேற்றினார்கள் என்று கூறுவதைப் பற்றி நன்கு சிந்திக்க வேண்டும்.

## நம்பாதது மக்களை நாடுவது அவர் பணத்தை

1990இல் முஸ்லீம் மக்கள் உளவாளிகளாகச் செயல்படுகிறார்கள் என்று கூறி, ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த இடங்களை விட்டு வெளியேற்றினார்கள். இப்போது தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்காக வெளியேறும்படி கூறியதாக கூறுகிறார்கள். ஆனால் இந்த இரு "வெளியேற்றத்"திலும் ஒற்றுமைகள் இருக்கின்றன.

1. மக்கள் நம்பகத்தன்மையானவர்கள் இல்லை.
2. பொருளாதாரம்.



1990இல் வெளியேறிய முஸ்லீம் மக்களின் சொத்துக்கள் புலிகளால் அபகரிக்கப்பட்டன.

1990இல் இருந்து யாழ்ப்பாணத்தில் தமது ஆட்சியை நடாத்திய புலிகள் மக்களிடம் கறக்க வேண்டிய எல்லாவற்றையும் கறந்து விட்டார்கள். பொருட்கள், சொத்துக்கள், உயிர்கள்.... எனவே தாம் பின்வாங்கும்போது மக்கள் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தால் அது தமக்குப் பாதகமாக இருக்கக்கூடும் என்று கருதியிருக்கலாம். இது மக்கள் பற்றிய நம்பிக்கையீனமே தாங்கள் இல்லாத புதிய சூழலில் மக்கள் தமக்கு சாதகமானவர்களாக இருப்பார்கள் என புலிகள் நம்பவில்லை.

அடுத்த விடயம் – யாழ்ப்பாணத்து மக்களின் சர்வதேசத் தொடர்பு, பொருளாதார வளம் புலிகளுக்குத் தொடர்ந்து தேவை. அத்தகைய சூழ்நிலையில் மக்களை தமது கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசத்தில் விட்டு வைத்தால் தமது பொருளாதார, சர்வதேச வலைப்பின்னலும் அடிபட்டுப் போகும் என்று அவர்கள் கருதியிருக்கக்கூடும்.

இவை எல்லாம் எதைக் காட்டுகிறதென்றால் மக்களுக்காகப் புலிகள் என்ற கருத்து ஒரு மாயை, பொய்ப் பிரசாரம் என்பதனைப் புலப்படுத்துகின்றன.

எனவே புலிகள் மக்களைக் கடத்திச் சென்றுள்ளார்கள் என்பதனைத் தவிர இங்கு வேறெதையும் கூறமுடியாதுள்ளது.

## வாழ்க்கையை அழித்து வாழ்க 'மாவீரம்'!

தற்போது புலிகளால் படுகொலை செய்யப்பட்ட முன்னாள் யாழ் பல்கலைக்கழக மருத்துவக்கல்லூரியின் விரிவுரையாளர் ரஜனி திரணகம அவர்கள் முறிந்தபனை என்ற நூலில் எழுதிய ஒரு விடயம் ஞாபகத்திற்கு வருகிறது. 30 லட்சம் தமிழ் மக்கள் அழிந்து பட்டாலும் நாம் தமிழீழக் கோரிக்கையை கைவிடமாட்டோம் என்று புலிகளின் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் யோகி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கூறியிருந்தாராம்.

தற்போதைய நிலைமைகள் அதனை வலுப்படுத்துகின்றன. புலிகள் மக்களை தம்முடன் சேர்ந்து உடன் கட்டையேற நிர்ப்பந்தித்துள்ளார்கள்.

எப்போதும் சொந்தக்காலில் நிற்பதையே கருத்தாகக் கொண்ட யாழ் மக்கள் மற்றவர்களின் தயவில் வாழ்வது என்பது, அவர்களுடைய சுயமரியாதை–கௌரவம் சம்பந்தப்பட்ட பிரச்சினையாகவே கருதுகிறார்கள். தலைமுறை தலைமுறையாக தாம் வாழ்ந்த இடங்கள், தாம் தேடிய தோட்டங்கள், உயிர் இழப்புக்கள் ஆகியவற்றால் அவர்கள் மனோரீதியிலும் உடல்ரீதியிலும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

அவர்களில் ஒரு கணிசமான பகுதியினரை வன்னிப் பெருநிலப்பரப்பில் குடியேற்றியுள்ளதாகப் புலிகள் அறிவித்துள்ளனர். ஆனால் இது எவ்வளவு தூரம் உண்மை என்பது ஒருபுறமிருக்க, இது மக்களின் விருப்பத்திற்கு விரோதமான நடவடிக்கை என்பதில் எதுவித ஐயமுமில்லை.

பெரும்பாலான மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்வதையே விரும்புகிறார்கள். புலிகள் தமது யுத்தவாத அதிகார அபிலாசைகளுக்காக, மக்கள் தமது வாழ்க்கையை அழித்துக் கொள்ளக் கோருகிறார்கள் என்பதே இங்கு நாம் மனங்கொள்ள வேண்டிய விடயமாகும்.




## நல்லவை எதுவும் நடக்காது நாமிருக்கச் சமாதானமா?

மக்களின் அபிலாசைகளுக்கும் புலிகளின் விருப்பங்களுக்கும் பாரிய முரண்பாடுகள் உண்டு. சமாதானப் பேச்சுவார்த்தைக்காக கொழும்பிலிருந்து பிரதிநிதிகள் சென்றபோதும், தெற்கிலிருந்து சமாதானக் குழுவினர் யாழ்ப்பாணம் சென்றபோதும் யாழ் மக்கள் காட்டிய பேராதரவு இதற்குச்சான்று.

ஆனால் புலிகள் தமது யுத்தவாதக் கண்ணோட்டத்திலிருந்து இம்மியளவும் தளர்வைக் காட்டத் தயாராக இருக்கவில்லை. விரிவான அளவில் ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தையை இடைநடுவில் அவர்களாகவே முறித்துக் கொண்டார்கள். எங்கே மக்களின் சமாதான அபிலாசை வலுப்பெற்று விடுமோ என்ற பயந்தான் அவர்களை அவசரப்பட வைத்தது.

நல்லவை எவையுமே நடக்காது என்று கூறி மக்களை அவநம்பிக்கைக்குள் தள்ளினார்கள். அதற்காக தமது பிரச்சார சாதனங்களை முழுமூச்சுடன் பயன்படுத்தினார்கள். மாற்றுக் கருத்துக்கள் எதுவும் மக்களைச் சென்றடைந்து பலவருடங்களாகிவிட்டது. மக்களின் சிந்தனைச் சுதந்திரம் பறிக்கப்பட்டு எவ்வளவோ காலமாயிற்று. மக்களை தங்களின் மறுவார்ப்பாக உருவாக்க முனைந்தார்கள். புலிகள்தான் மக்கள் மக்கள்தான் புலிகள் என்ற கருத்தும் அந்த அடிப்படையிலேயே அவர்களால் உருவாக்கப்பட்டது.

மக்களின் சிறு சிறு விருப்பங்களெல்லாம் அவர்களின் யுத்தவாதத்திற்கு முன்னால் மிதித்தழிக்கப்பட்டன. மக்கள் கசக்கிப் பிழியப்பட்டனர். எல்லாப் படுகொலைகளும், எல்லா பணவசூலும், எல்லாச் சொத்துச் சுவீகாரமும் தமிழீழத்தின் பெயராலேயே மேற்கொள்ளப்பட்டன. அவர்கள் எல்லாவற்றையும் விட அழகாக நிர்மாணித்த மாவீரர்கள்

தொடர்ச்சி.... பக். 9

படிப்பகம்

www.padippakam.com



சுடலைகள் கூட தமது யுத்தவாத பெருமிதத்தை பறைசாற்றத்தான்.

ஆனால் இப்போது மக்களின் அபிலாசைகளுக்கும் புலிகளின் விருப்பத்திற்குமிடையே, பெரும் புவியதிர்ச்சியில் ஏற்பட்ட பாரிய பிளவுபோல் இடைவெளி தோன்றத் தொடங்கியுள்ளது. இந்தப்பிளவு இப்போது மெல்ல மெல்ல அதிர்வலைகளை எழுப்பி வருகின்றது.

## ‘தமிழீழம்’ என்று சொல்லி தவிக்க விட்ட தம்பிமார்

உலகின் எல்லாச் சமூகங்களும் தமது கௌரவம்-சுயமரியாதையைப் பாதுகாத்துக் கொண்டு மற்றவர்களுடன் சமாதானமாக வாழவே விரும்பும். தமது சந்ததியினரின் எதிர்காலம் பற்றி அது அக்கறை கொண்டிருக்கும். இது உலகப் பொது விதி. எமது தமிழ்ச் சமூகமும் அதற்கு விதிவிலக்கல்ல. நிகழ்காலமும் எதிர்காலமும் இருண்டு விடுவதை எந்தச் சமுதாயமும் விரும்பாது.

ஆனால் புலிகள், தமது யுத்தவாத நோக்கங்களுக்காக தமிழ் மக்களின் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் பாழடிக்க முனைகிறார்கள்.

தமது குழுவின் யுத்தவாத அதிகார விருப்பங்களுக்காகத்தான் அவர்கள் –

- ★ சகோதர இயக்கங்களை உடல் மீதியின்றி அழித்தார்கள்.
- ★ சாதாரண சிங்கள மக்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதல்களை நடாத்தினார்கள்.
- ★ ஆண்டாண்டு காலமாக தமிழ் மக்களுடன் அன்னியோன்னியமாக வாழ்ந்த முஸ்லீம் மக்களை வெளியேற்றினார்கள்.
- ★ இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அமுல்படுத்த வந்த இந்திய அமைதி காப்புப் படையினர் மீது தாக்குதல் தொடுத்தார்கள்.
- ★ பிரேமதாசா அரசுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு ஆயுத, பொருளாதார உதவிகளைப் பெற்றுக்கொண்டு வட-கிழக்கு மாகாண அரசுக்கெதிராகவும், இந்திய அமைதிகாப்புப் படையினருக்கெதிராகவும் போர் தொடுத்தார்கள்.
- ★ இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களைப் படுகொலை செய்தார்கள்.
- ★ தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டிய சந்திரிகா அரசின் சமாதான முயற்சிகளை முறியடித்தார்கள்.
- ★ அதே யுத்தவாத நோக்கங்களுக்காகத்தான் வலிகாமம் பகுதியில் வாழ்ந்த முழுத் தமிழ் மக்களையும் தம்முடன் பலவந்தமாக அழைத்துச் சென்றார்கள்.

ஒரு யுத்தவாதக் கண்ணோட்டம் கொண்ட ஜனநாயக உணர்வு சிறிதுமற்ற ஒரு இயக்கத்தின் குறுகிய விருப்பங்களுக்கேற்ப இவ்வளவு பாரிய சேதம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

## புலிகளை தாங்குதலும் மக்கள் உயிரை வாங்குதலும்

துரதிர்ஸ்டம் என்னவென்றால், இந்த இயக்கத்தின் எல்லாவிதமான கொடூர செயற்பாடுகளையும் நியாயப்படுத்தி எழுதி-பேசி வரும் பத்திரிகைக்காரரர்கள், சர்வதேச வானொலி சேவைகளில் சம்பந்தப்பட்டோர் மற்றும் புத்திஜீவிகள் கலைஞர்களின் செயற்பாட்டைத்தான் என்னென்று விளக்குவது? இவர்கள் புலிகள் செய்யும் பாவகாரியங்களை எல்லாம் மூடிமறைக்கும் கைங்கரியத்தை மேற்கொள்கிறார்கள்.

> ஆயுதங்களற்ற சனங்களின் அபிப்பிராயங்களுக்கும் தேவைகளுக்கும் ஒரு இடமுமில்லை. புலிச் சின்னங்கள், புலி நீதிமன்றங்கள், புலிகளின் திறப்பு விழாக்கள்... சனங்கள்தான் வெளியில் - தங்களின் போராட்டப் பாதையையே தீர்மானிக்க மாட்டாமல்.
>
> - ராஜனி திராணகம
>
> நன்றி: பனிமலர் (ஆடி 1990)

உதாரண்மாக பதவியா, அம்பாறை, கெப்பற்றிக்கொல்லாவ பகுதிகளில் எல்லாம் சாதாரண சிங்கள மக்களை புலிகள் படுகொலை செய்யவில்லை என்று காட்டுவதில் பி.பி.சி. யைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் பகீரதப் பிரயத்தனம் செய்தார். அவர் இப்போது பலாத்காரமாக மக்கள் வெளியேற்றப்பட்ட பகிரங்கமான உண்மையையும் மூடி மறைக்க விழைகிறார்.

## கிழிந்து போகிற வாழ்வும் கிரிக்கெட் வர்ணனையும்

புலிகளை அமானுஷ்ய சக்திகள் என்று காட்ட முயன்ற புத்திஜீவிகளும், ஆய்வாளர்களும் இன்று தமது தீர்க்கதரிசனங்கள் பொய்த்துப் போய் விடுமோ... இதனால் நாம் செல்லாக் காசாகிவிடுவோமோ என்றும் அங்கலாய்த்து நிற்கிறார்கள்.

சாவுகளின் எண்ணிக்கையையும், சிறுவர்களின் சமரையும், விமான வீழ்த்துதல்களையும், மனித வெடிகுண்டுகளையும் அதீத ரசனையுடன் எழுதி வந்தவர்களுக்கெல்லாம் இன்றைய நிலைமை ஒரு அந்தர நிலையைத் தோற்றுவித்திருக்கின்றது. தாம் பாதுகாப்பான இடங்களில் இருந்துகொண்டு ஒரு கிரிக்கட் விளையாட்டுக்கு வர்ணனை செய்வதுபோல செய்து கொண்டிருந்தவர்கள் எல்லோரும் சமாதானம் வந்துவிடும் என்று பயந்து திரிகிறார்கள்.

அவர்களுக்கென்ன? பேச்சு எழுத்து வியாபாரிகள்தானே. சாதாரண மக்களின் பாடு அவர்களுக்கென்ன தெரியப்போகிறது? அவர்கள் நெப்போலியனைப்பற்றி அலெக்சாண்டரைப் பற்றி ஹிட்லரைப்பற்றி புகழ்பாடிய பழைய வரலாற்று ஆசிரியர்களைப் போல பிரபாகரன் கீர்த்திபற்றி எழுதிவிட்டுப் போவார்கள். ஆனால் இந்தப் பேரறிஞர்களுக்கு சாதாரண மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் ஒன்றும் பொருட்டல்லவே.


இல்லாவிட்டால் ஒன்று செய்வார்கள்; புலிகளின் வீழ்ச்சி உறுதி என்றாகிவிட்டால் இவர்கள் குத்துக்கரணமடிப்பார்கள்.

## தமிழ் வீரப் புல்லரிப்பும் தமிழ்மக்கள் தத்தளிப்பும்

தவிர கொழும்பிலே கோடிக்கணக்கான சொத்துக்கள்... கறுவாக்காட்டில், கொள்ளுப்பிட்டியில் ஆடம்பரமான வீடுகளில் இருந்து கொண்டு கடந்த 17 வருடங்களாக தமிழ் மக்களின் இரத்த ஆற்றில் நீச்சல் அடித்தவர்களுடன் விருந்துண்டு கொண்டு, மாமன் மருமகன் உறவுமுறை வைத்துக்கொண்டு ஐந்து நட்சத்திர ஹோட்டல்களைத் தவிர வேறெதையும் கண்டிராதவர்கள் தாம் சுத்தத் தமிழர் என்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். தமிழர் மானத்தைப்பற்றி வாய் கிழியக் கத்துகிறார்கள்.



# குறுக்கெழுத்துப் போட்டி-19



### இடமிருந்து வலம்

1. இன்னும் நாலு வருடங்களில் 21வது–.
4. முதலெழுத்து மரமாயும், மீதி விளக்கிலுமாய்... மொத்தத்தில் ஒரு தினுசு.
7. கடித மூலம் கிடைக்கும் உறவு.
9. படையல்.
11. கண் இமைப்பதற்குள் கடந்துவிடும் காலம். (கடைசி எழுத்தில்லாமல்)
12. நடனமாடும் சிவனின் இடம். (குழம்பி)
13. பொறி. (முதலெழுத்தின்றி, குழம்பி)
16. அருவருப்பான பயங்கர தோற்றம்.
17. கணவன்.
19. வாக்கியம். (தலைகீழ்)
22. செருப்பு.
23. அனுமார்.
26. காமக் கிளர்ச்சியூட்டும் விதமான நடவடிக்கை, பேச்சு.
27. எய்யப்படுவது.
29. நண்பகல்.
31. கப்பி. (தலைகீழ்)
32. முன்மாதிரியாகக் கருதுபவரின் வழிநடப்பவன்.
33. சிலசமயம் வேலையும் நடக்கும் இடம்.

### மேலிருந்து கீழ்

1. படிக்கவும் நம் நாட்டில் அவ்வப்போது எரிக்கவும் படுகிற இடம்.
2. நிறுத்தலளவை ஒன்று, முதலெழுத்தின்றி.
3. சென்னையில் ‘சாவ்’ விளையாட்டுக் கிராமம் அமைந்த ஒரு இடம். (தலைகீழ்)
4. பல லட்சம் மக்களை கொண்ட பெரிய ஊர்.
5. உறுதி.
6. குதிரை. (தலைகீழ்)
8. உலகம். (தலைகீழ்)
10. ரசாயனம்.
14. செல்வம்.
15. விளையாட்டுப் பொருள் ஒன்று. (குழம்பி)
16. தாமதிக்க முடியாத உடனடித் தன்மை.
18. திடுக்கிடும் வியப்பு.
20. ‘ந்தம்’ இல்லாத ஆனந்தம். (தலைகீழ்)
21. ஞானதிருஷ்டியால் குருஷேத்திரக் காட்சிகளை கண்டு திருதராஷ்டிரனுக்கு சொல்லியவன்.
24. அன்புக்கு கடைசி எழுத்தில்லை.
25. கலைமகளின் சிம்மாசனம். (தலைகீழ்)
27. விலக அல்லது விரிந்த.
28. சுவாசப் பையைத் தாக்கும் நோய். (தலைகீழ்)
30. வஞ்சக திட்டம். (தலைகீழ்)
31. ஆச்சி சுட்டது; காகம் எடுத்தது. (தலைகீழ்)

### கு.எ.போட்டி-18 விடைகள்:

| இடமிருந்து வலம்: | மேலிருந்து கீழ்: |
|---|---|
| 1. அமெரிக்கா | 1. அறிவுரை |
| 5. மதி | 2. களரி |
| 7. கின்னஸ் | 3. காகிதம் |
| 9. கதவு | 4. ஈனசுரம்) |
| 11. தராசு | 6. மலரம்பு |
| 12. சுரம்) | 8. தம்பிரான் |
| 13. மரை | 10. தமயந்தி |
| 14. சம்பிரதாயம் | 12. சுயம்வரம் |
| 16. யமன் | 14. சன்மானம் |
| 18. திம்பு | 15. தாதி |
| 19. மந்தமாருதம் | 17. மதன் |
| 22. தினகரன் | 19. மரக்கால் |
| 23. பரவசம்) | 20. கரு |
| 26. சின்னம்மை | 21. பேரின்பம் |
| 27. காணி | 24. வனம்) |
| 29. உபரி | 25. சமையல் |
| 30. சாவி | 26. பசி |
| 31. பேத்தல் | 28. கோணி 29. உதி |

**சரியான விடை எழுதி ரூபா 100 பரிசாகப் பெறும் அதிர்ஷ்டசாலி:**

**ஆர். சுபாஷினி**
**952, ஸ்ரீஜயந்தி மாவத்த,**
**வத்தளை.**

**பாராட்டுப் பெறத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு பேர்கள் வருமாறு:**

1. கே. நிலோஷன்,
   38/5, சூரியா லேன், மட்டக்களப்பு.
2. பா. பாலவதனி,
   பூங்கா வீதி, இல: 5, வவுனியா.
3. திருமதி இரகுநாதன்,
   256/6, உள்துறைமுக வீதி, திருகோணமலை.
4. கே.வி. ஆதவன்,
   91/3, வைத்தியா ரோட், தெகிவளை.
5. தம்பிராஜா ரமேஷ்,
   ஆலையடிவேம்பு வீதி, அக்கரைப்பற்று-07.
6. தி. ஜோதிப்பிரியா,
   158/5, கோணேசபுரம், திருகோணமலை.

**விடைகளை மட்டும் தனியாக ஒரு தபாலட்டையில் எழுதி எதிர்வரும் 20ந் திகதிக்கு முன் அனுப்பிவையுங்கள்.**

**புதிய கண்ணோட்டம்,**
**த.பெ.இல: 442,**
**கொழும்பு.**

துயரமானது என்னவென்றால், தவறான வழிகாட்டலில் வட-கிழக்கில் மரணித்துக் கொண்டிருக்கும் சிறுவர் சிறுமியர்க்கும், அலைந்துகொண்டும் தெருக்கோடிகளிலும் சாலைகளிலும் மரங்களின் கீழும் வாழும் மக்களுக்கும் இவர்களுக்கும் எட்டாத தூரம். அவர்களின் வாழிடமோ, அவர்களின் வாழ்க்கையோ, அவர்களின் இன்றைய அவலமோ இவர்கள் தமது வாழ்க்கையின் எந்தப் பாகத்திலும் கண்டிருக்க மாட்டார்கள். தமிழர்களை காக்கிறார்களாம் இவர்கள் சொல்கிறார்கள். இவர்களுக்கு அரசியல் ஒரு பொழுது போக்கு; இவர்களுக்கு பிரச்சினைகள் தீரவேண்டும் என்ற அவசியமும் கிடையாது.

சிங்கள இனவாதிகள் நாட்டின் இறைமை பௌத்தமதம் சிங்கள இனத்தின் பாதுகாப்புப் பற்றிப் பேசுகிறார்களே.... அதேபோல் தான் இந்த தமிழ் இனவாதிகளும்! இந்த பௌத்த சிங்கள இனவாதத்திற்காகப் போர் புரிபவர்கள் தவறாக வழிநடத்தப்பட்ட கிராமப்புறத்து வறிய சிங்கள இளைஞர்களே. ஆனால் வழிகாட்டியவர்கள் தமது பிள்ளைகளை மேற்கு நாடுகளில் சகல வசதிகளுடன் கல்வி கற்பிக்கிறார்கள்.

அதேபோல் தான் இந்தத் தமிழ் இனவாதிகளின் குழந்தைகளும் மேற்கு நாட்டுச் சொகுசில் கொழுப்பேறிப்போய் கிடக்கின்றன. இவர்களும் புலிகளுக்கு சபாஷ் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். புலிகள் நாசகார சக்தியாக வளர்வதற்கு இந்த கருத்து பேச்சு வியாபாரிகள் தம்மைத்தாமே புத்திஜீவிகள் என அழைத்துக்கொள்ளும் பேர்வழிக்ள் இந்த பழம்பெருமை பேசும் ஆடம்பர அரசியல்வாதிகள் எல்லோருமே காரணம்.

**- எஸ். திருநாவுக்கரசு**

படிப்பகம்

www.padippakam.com





# தப்புத் தாளங்கள்

கடந்த ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் தமிழ் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் தமக்குள்ளேயான முரண்பாடுகளுக்கப்பால் தீர்வு தொடர்பாக பொதுவான கருத்தை அரசுக்கு வலியுறுத்தும் பொருட்டு கூட்டாகச் செயற்பட்டு வந்தன. இதில் பாராளமன்றத்தில் அங்கம் வகித்த அங்கம் வகிக்காத அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டு செயற்பட்டன.

ஈ.பி.டி.பி. யைப் பொறுத்தவரை அக்கால கட்டத்தில் நடைபெற்ற பல்வேறு பேச்சுவார்த்தைகள், தெரிவுக்குழு எதிலும் எந்தவகையிலும் பங்குபற்றாதது மட்டுமின்றி தமிழ் இனப் பிரச்சினை தொடர்பாகவோ அதற்கான தீர்வு தொடர்பாகவோ வாயே திறக்காத, ஆனால் ஐ.தே.கட்சிக்கு சுவரொட்டி ஒட்டுவது கொடி பிடிப்பது என அதன் ஓர் அங்கமாகவே செயற்பட்டு வந்தமையும் பகிரங்கமானதே.

அதன் உச்சக் கட்டமே 94ம் ஆண்டு ஆகஸ்ட் பொதுத் தேர்தல் காலகட்டத்தில் டக்ளஸ் தேவானந்தா ஐ.தே.கட்சியின் யாழ் மாவட்ட இணைப்பாளராக ஐக்கிய தேசியக் கட்சியால் நியமிக்கப்பட்டமையாகும்.

ஆனால் அண்மையில் ஈ.பி.டி.பி. யின் பத்திரிகையான தினமுரசில் அக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரும், தினமுரசு ஆசிரியருமான அற்புதராஜா நடராஜா (ரமேஷ்) அற்புதன் என்ற பெயரில் எழுதும் துரையப்பா தொடக்கம் காமினி வரை என்ற தொடரில் ஈ.பி.ஆர்.எல்.எப். தோழர் ரேகனைப் புலிகள் கொலை செய்தமை தொடர்பாக எழுதும் போது புலிகளுக்கும் தமக்கும் (டக்ளஸ், ரமேஷ்) இருந்த நெருக்கம்-அவர்கள் பற்றி தமது புரிதலையும் எழுதியிருந்தார்.

அதற்கு நேர்மாறாக, கடந்த ஞாயிறு 17.12.95 'ஐலண்ட்' இல் டக்ளஸின் பேட்டியும் அதன் அடிப்படையில் 'ஐலண்ட்' இன் தலையங்கத்தையும் படித்திருக்கும் எவருக்கும் இவர்களது அரசியல் கோமாளித்தனத்தை காணமுடிந்திருக்கும்.

ஞாயிறு 'ஐலண்ட்' இல் டக்ளஸ் அளித்த பேட்டியில், ஏனைய கட்சிகளுடன் ஜனாதிபதியைச் சந்திக்க ஈ.பி.டி.பி. ஏன் செல்லவில்லை எனக் கேட்டதற்கு, அவர்கள் போர் நிறுத்தம் கேட்டார்கள், நாம் அதற்கு உடன்படவில்லை, புலிகளை அழித்து மக்களை மீட்பதே எமது குறிக்கோள்... தமிழ் தலைவர்களில் மூன்று தரத்தினர் உள்ளனர். முதலாவது புலிகளுக்கு வக்காலத்து வாங்குபவர்கள். இரண்டாவது ஒருபுறம் புலிகளுக்கும் மறுபுறம் அரசுக்கும் துதி பாடுபவர்கள். மூன்றாவது தரம் புலிகளுக்கு எதிராகச் செயற்படுபவர்கள். இதில் நாம் மட்டுமே மூன்றாந் தரத்தைச் சேர்ந்தவர்கள் (எந்த மூன்றாந்தரம்? அவருக்கே தெரியும்) என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதனை அடிப்படையாகக் கொண்டு, 'ஐலண்ட்' தனது ஆசிரியத் தலையங்கத்தில் டக்ளஸ் போன்ற தமிழ்த் தலைவர்களே இன்று தேவை என சான்றிதழும் வழங்கியிருந்தது. சிங்கள இனத்துவேஷத்தின் மொத்த வடிவமாக வெளிவருவதே 'ஐலண்ட்' பத்திரிகை என்று அதன் வாசகர்கட்கு நன்றாகவே தெரியும். ஐலண்டைப் பொறுத்தவரை நாட்டு நலன் என்பது சிங்கள இனவாதிகளின் நலன் என்பதையே குறிக்கும் என்பதும் அவர்கட்குப் புரியும்.


இப்பத்திரிகை இந்திய இலங்கை உடன்பாட்டை எதிர்த்தது, இன்றும் சந்திரிகாவின் அரசியற் தீர்வுத் திட்டத்திற்கெதிரான கருத்துக்களைப் பரப்புவதையே செய்துவருகிறது. மாகாண அரசைக் கட்டியெழுப்பவும் அதன் செயற்பாடுகட்கும் உறுதுணையாக இருந்ததால் இந்திய அமைதிப் படையை எதிர்த்து வெளியேறக் கோரியது. பிரச்சினை தீர்க்கப்படாமல் அமைதிப்படை வெளியேறக் கூடாது எனக் கூறிய ஈ.பி.ஆர்.எல்.எப். இற்கெதிராக அன்று கேலிச்சித்திரம் போட்டவர்கள் இன்று புலிகள் விமானத்தையும், கப்பலையும் வீழ்த்தும்போது இலங்கைப் பிரச்சினையில் தலையிட (புலிகளுக்கெதிராகப் போரிட) இந்தியாவுக்கு தார்மீகக் கடமை உண்டென்று எழுதுகின்றனர்.

மாகாண அரசைக் கலைப்பதற்கும் அழிப்பதற்கும் அன்று ஈ.பி.ஆர்.எல்.எப். இற்கெதிராக சேறடிப்பு செய்தது மட்டுமின்றி, அதனைச் செயற்படுத்த பிரேமதாசாவுடன் கை கோர்த்த புலிகளுக்கு ஏகப்பட்ட பிரச்சாரம் செய்தனர்.

இத்தகைய ஓர் பத்திரிகை ஒரு தமிழ்த் தலைவருக்கு சான்றிதழ் வழங்குவது என்பதே அத் தலைவரை எடைபோட போதுமானது. இன்று சிங்கள இனவாத்தின் நண்பனாக 'ஐலண்ட்' இனால் டக்ளஸ் அடையாளம் காணப்பட்டிருக்கிறார் என்பது சொல்லி விளங்க வேண்டியதில்லை.

அடுத்து ஐலண்ட்டில் அவர் காட்டிய வீரம், புலிகளை அழித்து மக்களைக் காப்பதே எனது குறிக்கோள் என்பது. புலிகளுக்கெதிராக போராட இராணுவத்துக்கு உதவுவேன் என்று பிரேமதாசாவை நம்பவைத்து தீவுப் பகுதியில் ஓர் குட்டி (புலி) ராச்சியம் நடத்தும் இவர்கள் இன்றுவரை ஒரு புலியையாவது பிடித்தார்களா, அல்லது அழித்தார்களா என்றால் அதுவும் இல்லை. மாறாக இவர்கள் புலிபிடிக்கத் தீவுப் பகுதியில் வைத்திருந்த சிலர் நீச்சலடித்தே புலிகளிடம் சரணாகதியடைந்ததுதான் நடந்தது.

கடற்படையும் இராணுவமும் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பகுதிக்குள் இருந்து எந்தத் தங்குதடையுமின்றி தீவுப்பகுதி மக்கள் மேல் சவாரி செய்யும் இவர்கள் குறைந்த பட்சம் ஐ.தே.கட்சித் தொண்டர்கள் செய்யவேண்டிய சுவரொட்டி, கொடி, குடை, ஆலவட்டம் பிடித்தலாவது செய்கிறார்கள் என்றால் பிரேமதாசா. மாதாந்தம் மில்லியன் கணக்கான பணத்தைக் கொடுத்து தமது அடியாட்களாகவே வைத்திருந்தார்.



இன்று சந்திரிகா அரசாங்கம் முற்று முழுதாகப் புலிகளை அழித்தொழிப்பதற்கான போரையே தொடங்கியிருப்பதாக, தான் நம்புவது போலவும்புலிகளை அழித்து மக்களைக் காப்பது என்ற அரசின் சுலோகத்தைத் தானும் சொன்னால் அரசைச் சந்தோசப் படுத்தலாம் என்பதுமே அவரது நோக்கமாகும். அரசிடமிருந்து வரும் வருமானத்தைத் தொடர்ந்து பெறவும், அதன்மூலம் தன் கட்சியின் இருப்பை உறுதிப்படுத்தவுமே ராகம் பாடும் இவர், ஏனைய கட்சிகள் போர் நிறுத்தம் வேண்டும் என மிண்டிவிழுங்கிக் கேட்டதாகக் கூறுவதுதான் வேடிக்கையானது.

ஏனெனில் இந்தப் போர் மூலம் குறிப்பிட்ட காலத்துள் புலிகளை முற்றாக அழித்து முழுமையான அமைதியை இராணுவம் நிலை நாட்டப்போவதோ, அல்லது புலிகள் இராணுவத்தை வென்று தமிழீழத்தை உருவாக்கப் போவதோ இல்லை. இதனை ஜனாதிபதியும் தெளிவாகவே தெரிந்து வைத்துள்ளார். அதனை அவரே கூறியுமுள்ளார். எனவே முடிவு காணமுடியாத யுத்தம் அர்த்தமற்றது என்பதைப் புரிந்து கொள்ள சராசரி ஞானம் போதும்.

மேலும் இதன்மூலம் புலி பேச்சுவார்த்தை அரங்கிற்கு வரப்போவதோ, வட-கிழக்கு முழுவதையும் இராணுவம் தனது கட்டுப் பாட்டில் வைத்திருக்கப் போவதோ இல்லை. எனவே இந்த யுத்தத்தின் மூலம் அழிவும் அவலமும் மக்களுக்கே. லட்சக்கணக்கில் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது இடங்களுக்குச் சென்று வாழ்வைத் தொடர வேண்டுமானால் போர் நிறுத்தம் தேவை. அத்துடன் வடமராட்சி தென்மராட்சியில் குவிந்திருக்கும் மக்கள் அழிவு தடுக்கப்படுவதற்கும் போர் நிறத்தம் அவசியமாகும். இது மிகத் தெளிவாகவே ஏனைய கட்சிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை டக்ளஸ் நன்றாகவே புரிந்து கொண்டிருக்கிறார். அல்லது கேள்விப்பட்டாவது இருக்கிறார். அண்மையில் லண்டனில் தனது நண்பர்களுடன் பேசும்போது சில விடயங்களைத் தெளிவாகவே குறிப்பிட்டுள்ளார். அதில் ஒன்று சந்திரிகா சரியான ஓர் தீர்வை முன்வைக்கவோ, நடைமுறைப்படுத்தவோ மாட்டார்; அடுத்து புலிகளை இராணுவ ரீதியாக வெற்றிகொள்வது கடினம்; எனவே இந்தியா போன்ற நாட்டின் உதவிகளைப் பெறுவதன் மூலமே எமது பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என திருவாய் மலர்ந்தருளிய இவர்.... ஆனால் இவ்விடயங்களை நான் பகிரங்கமாகக் கூறமுடியாது, ஏனெனில் எனது கட்சியை பலப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளேன், எனவே அரசாங்கத்திற்கு எதிராக எம்மாற் செயற்பட முடியாது என்றும் கூறியுள்ளார்.

எது உண்மை? புலிகளை அழித்து மக்களைக் காப்பது என 'ஐலண்ட்'டுக்குச் சொன்னதா? அல்லது அவ்வாறு சொன்னால்தான் அரசாங்கத்தைச் சந்தோசப்படுத்தி கட்சியை பலப்படுத்தலாம் என்பதா?

தலைவர் இப்படி நிறங்களை மாற்ற, அவரது தொண்டரான ரமேஷ் எம்.பி. அவர்களோ, அற்புதன் என்ற பெயரில் தினமுரசில் தான் எழுதும் தொடரில், டக்ளஸ் ஈ.பி.ஆர். எல்.எப். இன் இராணுவத் தளபதியாக இருந்த போது யாழ்ப்பாணத்தில் கிட்டுவுடன் அந்நியோன்னியமாக இருந்ததாகவும், பிரபாகரனும் கருணையுள்ளவராக இருந்தவர் போலவும் எழுதியுள்ளார். ஆங்கிலப் பத்திரிகையில் தலைவர் புலி எதிர்ப்பு தாளம். தினமுரசில் தொண்டர் புலிகளுடன் நட்பு ராகம்.

ஏனிந்தத் தப்புத் தாளம்?

# போகிற போக்கில்....

## அழைப்பும் - மறுப்பும்

யாழ்ப்பாணத்தை படைகள் கைப்பற்றியதன் பின்பு இடம்பெயர்ந்த மக்களை அரசு திரும்ப அழைக்கிறது. தங்கள் கட்டுப்பாட்டிலிருக்கும் மக்களை புலிகள் அனுப்ப மறுக்கிறார்கள். ஆக இந்த அழைப்பு அமைதியைக் காரணங் காட்டி மின்சாரம், புனரமைப்பு, நிவாரணம், உத்தியோகம் என அழைக்கிறது. மறுப்போ இவையெல்லாம் பம்மாத்து. தொடர்ந்தும் யுத்தம்தான் என அனுப்ப மறுக்கிறது. அழைப்பு அரசியல் தீர்வைக் காரணங்காட்டி புலிகளைப் பேசவரலாம் என்கிறது. மறுப்போ பேச்சு என்ற கதையே இனி இல்லை என்கிறது. அழைப்பு யுத்தத்தை நிறுத்த என்ன வழி என்ற நெருக்கடிக்குள் நிற்கிறது. மறுப்போ யுத்தத்தைத் தொடர்ந்து நடாத்த தனக்கு மக்கள் தேவை என நினைக்கிறது.

ஆக யுத்தத்தை தொடர்ந்து நடாத்த மக்கள் தங்களிடம் இருக்க வேண்டும் (கெரில்லாக்கள் கொஞ்சம் வசனத்தை குழப்பியிருக்கிறார்கள்). சாவகச்சேரியில் உள்ள மக்களென்றாலென்ற சந்தி வெளியில் உள்ளவர்களென்றாலென்ற மக்கள் மக்கள்தான்.

## மீண்டும் மக்கள்

புலிகளுக்கும் இராணுவத்திற்கும் புதுக்குடியிருப்பில் நடந்த மோதலில் 30இற்கு மேற்பட்ட பொதுமக்கள் இறந்துள்ளனர். வேலைக்கும் வீட்டுக்கும் போனவர்கள் எவர் எங்கு என்பதே தெரியாத நிலையில் மக்கள் அலைந்து திரிய S.L.R.C. எடுத்துக் கொண்ட முயற்சியில், இரண்டு நாட்களின் பின் உடல்கள் கிடைத்துள்ளன. அதுவரை அந்த இடத்திலேயே உடல்கள் கிடந்திருக்கிறது. வழமையாக மோதலில் புலிகளும், இராணுவமும் இறந்தால் பெட்டியெடுத்து பாடம் பண்ணி பரிமாற்றம் செய்யும் பொது அமைப்பு கூப்பிட்டும் வரமறுத்து எட்டிக்கூடப் பார்க்கவில்லையாம். இப்படி இருக்க சூரிய புத்திரர்களின் மக்களின் பிரதிநிதி ஒருவர் போன்பண்ணி கேட்டாராம் வைத்தியசாலைக்கு, 'எங்கள் ஊர் ஆட்கள் ஆரும் அதற்குள் அகப்பட்டினமே' என்று. இன்னொரு பிரதிநிதியோ தான் எடுத்துக்கொண்ட முயற்சியால்தான், என்னால் தான் இவ்வளவு விரைவில்(!) உடல்கள் அடக்கத்திற்கு கிடைத்தன என்று வானொலிக்கும் கூறிவிட்டார். இந்த இடத்திலேயும்.... வேறு என்ன சொல்ல இருக்கிறது. மக்கள் மக்கள்தான்.

## வேண்டிப் பழகிய கை

முன்பு அண்ணன் தம்பி சகோதரம் மச்சான் என்று இருக்கக்கூடிய உறவுகளைப் பாவித்து உச்சிகுளிர்ந்து போனார் ஒருவர். பதிலுக்கு உபகாரமாய் பணமும், கொண்டு திரிய துவக்குகளும், கொழும்பில் ஆள்பிடித்தலுக்கும் அடாவடித்தனத்திற்கும் அதிகாரமும் கிடைத்தது. உச்சிகுளிர்ந்த தலைவர் சொன்னார் 'பிரேமதாசா தெய்வம்.' தமிழர் பிரச்சினையை தீர்க்க வந்துள்ளார். தீர்ப்பார். தீர்க்கிறார். தீர்ப்பார்....

பிரேமதாசாவின் ஆயுளோடும் அரசாங்கத்தின் மாற்றத்தோடும் தலைவர் அடித்தார் பல்டி. வேறு யார்? நமது தீவுக்கட்சி தலைவர்தான். இன்று 'சந்திரிகா தெய்வம். சந்திரிகாவைக் காப்பாற்றுவோம்.' முன்பு ஐ.தே.க.வை விட்டால் ஆளில்லை என்றார். அந்தக் கட்சியோ தமிழர்களுக்கு அப்படி ஒரு பிரச்சினையே இல்லையே என்றது. சும்மா வேண்டிய கை சொறியாமல் இருக்காது. 'விட்டால் ஆளில்லை' என்று கண்டுபிடிக்கும் தியறியை தலைவர் ஒருக்கா விளங்கப்படுத்திச் சொல்ல வேண்டும். கொள்கையைப் பற்றியெல்லாம் தமிழ் மக்கள் கேட்கிறார்களா என்ன?

## அடித் தெளிவு

பிரதி பாதுகாப்பு அமைச்சருடன் சூரிய புத்திரர்களின் அண்மைச் சந்திப்பில், யாழ்ப்பாணத்தை படையினர் கைப்பற்றியதற்காக கைகுலுக்கி பாராட்டினராம். கூடவே நாங்கள் மிதவாதிகள். இயக்க அமைப்புக் கட்சிகளை நம்பமுடியாது என்றும் ஒரு பிரதிநிதி அட்வைஸ் பண்ணியதாகவும் பத்திரிகையாளர்களிடையே ஒரு கதை அடிபடுகிறது.

பேச்சுவார்த்தைக்கு புலிகள் வரமாட்டார்கள். புலிகளின் குணாம்சமே அதுதான் என்பதை தெளிவாகப் புரிந்து வைத்துள்ளார்கள்.

## மூக்கில் விரல்

அமெரிக்கா, கனடா, லண்டன் ஆகிய இடங்களுக்கு சுற்றுலா ஒன்றை மேற்கொண்ட தீவுக் கட்சித் தலைவர், போன இடமெல்லாம் ஈ.பி.ஆர்.எல்.எஃப். தோழர்களை வளைத்துப் போட முயற்சித்தாராம். சென்னையிலும், இலங்கையிலும் பணத்தாலேயே ஆட்களை வாங்கிப் பழகிய பழக்கம்... அதொருபக்கமிருக்க, போகும்போது பெருந்தொகையான பணத்தை வெளிநாட்டுக்கு மாற்றியது கண்டு, அரசின் மேல்மட்டத்தினரே மூக்கில் வைத்த விரலை எடுக்கவில்லையாம்.

படிப்பகம்

www.padippakam.com



(பின்பக்கத் தொடர்ச்சி)

பில் வரலாற்று சம்பவங்களும் மட்டக்களப்பு மக்கள் சமூகம் பற்றிய புதிய ஆய்வுகளும் பல புதிய பரப்பிலே மேற்கொள்ளப்பட வாய்ப்புகள் உண்டாகும். காலஞ்சென்ற திரு. அருள் செல்வநாயகத்தின் விபுலானந்தர் தொண்டு, கவிஞர்கள், ராஜபாரதி, நீலாவாணன் போன்றோரின் கவிதைப் பணி என்பனவும் ஆய்வுக்கு உட்படுத்தப்படல் வேண்டும். உத்தேச மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கம் பாலபண்டித பரீட்சையை பொறுப்பேற்று நடத்தலாம். நம்மிடையே களுவாஞ்சிக்குடி திரு. விஸ்வலிங்கம் பண்டிதர் போன்றோர் இருப்பது நமக்குப் பெருமை. அவரைப் போன்றோரை நாம் பயன்படுத்த வேண்டும். கலைஞர்களை ஊக்குவிப்பதற்கான திட்டங்களும், கலைஞர்களைப் பயிற்றுவிப்பதற்கான கலைப் பட்டறைகளும் அவசியம்.

ஆனந்தனுடைய உரையில் அவரது ஆழமான இலக்கியப் பார்வையும், அவரது இலக்கிய ஆதங்கமும் வெளிப்பட்டது.

இந்த ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் ஈழத்தமிழ் கலைஞர் ஒன்றியத்தின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட செயற்குழு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. தலைவராக திரு.வீ.ஆனந்தன் அவர்களும், செயலாளராக த.கோபாலகிருஷ்ணன் அவர்களும் தெரிவாகினர்.

ஒன்றுகூடல் நிகழ்ச்சிக்குப்பின்னர் அதே தினத்தன்றும் (01.10.89), பின்னர் 15.10.89 அன்றும் ஈழத் தமிழ்க் கலைஞர் ஒன்றியத்தின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டச் செயற்குழு கூடி திட்டங்களை வகுத்தது.

- ★ கலைஞர்களின் விபரங்களை தயாரிக்கப்பட்ட மாதிரிப்படிவங்களில் திரட்டித் தொகுப்பது.
- ★ கலாநிதி மு. மௌனகுருவின் வழிகாட்டலில் மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் நாடகப் பட்டறை ஒன்றினை ஒழுங்குசெய்து நடாத்துதல்.



கோமலுடன் ஆனந்தன்

- ★ 1990 சித்திரையில் மட்டக்களப்பில் பிரம்மாண்டமான நாட்டுக்கூத்துக் கலைவிழா ஒன்றினை நடாத்துதல்.

இவை அன்று வகுக்கப்பட்ட திட்டங்களில் சில. அவற்றை நடைமுறைப்படுத்த பூர்வாங்க வேலைகளும் முடுக்கிவிடப்பட்டன. வட-கிழக்கு மாகாண அரசு உதவி வழங்க முன்வந்தது. ஆனால் 1989 இறுதிப் பகுதியில் வட-கிழக்கில் மாற்றமுற்ற அரசியல் சூழ்நிலை துரதிருஷ்டவசமாக ஈழத் தமிழ்க் கலைஞர் ஒன்றியம் எழுந்து நடமாட முடியாதபடி முடமாக்கிவிட்டது. எனினும் அன்று ஆனந்தன் கூறிய இலக்கியத் தேவைகளும், ஈழத் தமிழ்க் கலைஞர் ஒன்றியத்தின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டச் செயற்குழுவின் தலைவரான அவரது வழிகாட்டலின்கீழ் தீட்டப்பெற்ற திட்டங்களும் இன்றும் பொருந்தக்கூடியனவே.

**- செங்கதிரோன்**

## புலிகள் சாதனையாளர்கள்தான்....

(7ம் பக்கத் தொடர்ச்சி)

புத்திஜீவிகளைக் கடத்துவதும் கொலை செய்வதும் புலிகளுக்குப் பொழுது போக்காகி விட்டது. மக்கள் நலன்சார்ந்த அனைத்தையும் அபகரித்தலும் இவர்களுக்கு வழமை. அரசியல் கொலைகள், தனிப்பட்ட கொலைகள், கட்டாய வரிவசூலிப்பு, கட்டாய ஆட்சேர்ப்பு போன்றவையும் புலிகளால் சமூகத்திற்குப் போடப்பட்ட மாய வேலிகளாகவுள்ளன. பொதுவாகத் தமிழ் சமூகம் புலிகளால் சிறைபிடிக்கப்பட்டுள்ளது.

### 6. மரணத்தின் பிடியில் மக்கள் அடகுவைப்பு

புதிய அரசு கொடுத்த சமாதானத்துக்கான வாய்ப்புக்களில் தாங்கள் சிக்குண்டு தோல்வியடைந்துவிவோமென்ற பீதியில் மீண்டும் போரைத்தொடங்கி வழமையான போக்கைக் கடைப்பிடித்து தமிழ் மக்களின் வாழ்வை மரணத்தின் பிடியில் அடகுவைத்தமை. அத்துடன் இலட்சக்கணக்கானோரை தங்களது வசிப்பிடங்களில் இருந்து வன்னிப் பிரதேசத்திற்கு அகதிகளாக விரட்டியமை.

இதுபோன்ற பல சாதனைகளை இன்னும் அடுக்கிக்கொண்டே போகலாம். புலிகள் சாதனையாளர்கள்தான் அதை யாரும் மறுக்க முடியாது. எதில்? மக்களின் வாழ்வை நாசமாக்குவதில்.

போராட்டமென்பது இருக்கும் நிலையை விட முன்னேற்றகரமான மாற்றத்தை உண்டு பண்ணவே தேவையானது. ஆனால் நடப்பது பின்னடைவுகளை நோக்கியதாகவே காணப்படுகின்றது. கல்வி, பொருளாதார, சமூக அரசியல், கலை, கலாச்சார ரீதியில் பலவீனமடைந்தே எமது சமூகம் போய்க்கொண்டிருக்கிறது. அதைத் தடுக்க அமைதியே வழியாகும். அமைதிக்கு எதிரானவர்களை மக்கள் ஒதுக்கும் வரை சமாதானம் எட்டாக்கனிதான்.

பல்லின மக்கள் வாழும் இந்நாட்டின் இறைமை பாதிக்கப்படாதவகையில் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான தீர்வொன்றின் மூலம் கௌரவமாக வாழ்வதா? அல்லது புலிகளின் பிழையான வழிகாட்டல் மூலம் தமிழீழக் கோரிக்கைக்கு உடன் நிற்பதா? என்பதை முடிவு செய்யும் தீர்க்கமான காலகட்டமே இதுவாகும். எடுக்கப்படும் முடிவிலே தான் தமிழ் மக்களின் எதிர்காலம் அமைதியானதா என்பதை முடிவு செய்யலாம்.

இலங்கையின் ஒருமைப்பாட்டுக்குள் நியாயமான தீர்வை மக்க்ள் ஏற்றுக்கொள்ளாமல் புலிகளின் சேற்றுச் சகதிக்குள் சிக்கிக் கொண்டால் தமிழீழமல்ல தலைமுறையும் மிஞ்சாது.

### ஆறுதல் மட்டும் போதாது ஆக்கபூர்வமான செயல்பாடுகளும் தேவை

அரசும் தொடர்ச்சியாகத் தமிழ் மக்களை ஏமாற்றும் விதமாக செயற்படாமல் புலிகளிடமிருந்து மக்களை விடுவிக்க மக்கள் நலன் சார்ந்த அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதுடன், பாதுகாப்புப் படைகளின் தவறான போக்குகளையும்-புரிதல்களையும் கைவிட்டு மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்த உரிய அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும்.

இந்த நாட்டு மக்கள் ஒரு தேசத்திலா இரு தேசத்திலா வாழ்வது என்பதை அரசே தீர்மானித்து இனவாதிகளிடமும், பாசிசவாதிகளான புலிகளிடமும் இருந்து மக்களை விடுவிக்கவும், ஏனைய தமிழ் கட்சிகளின் கோரிக்கைகளுக்குச் செவிமடுத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வேண்டும்.

அனைத்து தமிழ் கட்சிகளும் தனிப்பட்ட முரண்பாடுகளை விடுத்து மக்களின் பெயரால் ஒன்றுபட்டு நெருக்கடியான இச்சந்தர்ப்பத்தில் ஒன்றுபட்டுக் குரல் கொடுத்து அமைதிக்கான வழியை நாட்டில் ஏற்படுத்த வேண்டும்.

திரும்பத்திரும்ப அரசியல் தீர்வை உரத்த குரலில் ஜனாதிபதி வலியுறுத்துவதால் ஆறுதல் மட்டுமே ஏற்படும். அது மட்டும் போதாது. ஆக்கபூர்வமான செயற்பாடே இன்று தேவை.

## கல்லாய் மனிதனாய் பேயாய்

மக்களுக்காகவே எமது போராட்டங்கள்
மக்களைக் காக்கவே
எம் கையில் ஆயுதங்கள்
இடிஅமீனும், ஹிட்லரும் கூட
இதைத்தான் சொல்லி வந்தார்
ஆரிய முதன்மை என்று
ஆர்ப்பரித்தார் ஹிட்லர்
ஆசியரைச் சூறையாட
ஆணை இட்டார் இடி அமீனார்
யூதரை அழித்போது - தலை
குனிந்த ஜேர்மனியர்
இன்றுமே நிமிரவில்லை.
ஆசியரின் சொத்தை
அபகரித்த உகண்டர்கள்
சர்வதேச ரீதியில்
கொள்ளைக்காரர் ஆனார்கள்.
மானுடத்தை நேசிக்காத போராட்டம்
என்றும் வெறும் பேயாட்டந்தான்
யூதனும் கறுப்பனும் தமிழனும்
சிங்களவனும் எம்மவன் எமது சாதி
எதிலும் குறைவில்லாதவன்
நான்.....
உயர்ந்தவன்தான் - ஆனால்
எவனுமே உலகத்தில்
என்னைவிடத் தாழ்ந்தவனில்லை.

- ஊரான்

# யாழ்ப்பாணத்தைப் புலி....

(5ம் பக்கத் தொடர்ச்சி)

ரீதியாக அது அவசியமானதாக இருந்தது. காலங் கடக்கு முன்னர் சில இராணுவ வெற்றிகளை தாம் தடைய வேண்டுமென அவர்கள் விரும்பியது. இது மனோவியல் ரீதியாக ஓர் எழுச்சியையும், இராணுவ ரீதியாக ஓர் நம்பிக்கையையும் கொடுக்குமென்று பிரபாகரன் எதிர்பார்த்தார்.

பிரபாகரனின் நிலையில் இருந்தாலே அவரின் அவசரம் யாருக்கும் புரியும். இலங்கையில் இருக்கக்கூடிய பெரும்பான்மையான மக்கள், தமிழ் மக்கள் உள்ளடங்கலாக சந்திரிகா அவர்களை உண்மையாகவே சமாதான நோக்கில் ஆர்வம் கொண்டவராகவே பார்த்தார்கள். ஆனால் அவர் தமிழ் மக்களுக்கு கொடுத்ததென்பது, இந்திய அமைதி காக்கும் படை தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுத்ததை விடக் குறைவானதே.

முழு வட மாகணமும் கிழக்கு மாகாணமும் இணைந்து ஒரு மாகாண சபையாக இருந்தது. ஆனால் சந்திரிகா அவர்கள் கிழக்கு மாகாணத்தில் சில மறுசீரமைப்புக்களைச் செய்வாரே தவிர, முழு கிழக்கையும் வடக்குடன் இணைக்க மாட்டார். திருகோணமலையை தலைநகரமாகக் கொண்டு வட-கிழக்கு இணைந்த தமிழ் மாகாணமொன்றை இந்திய அமைதிகாக்கும் படை பெற்றுக்கொடுத்தபோது அதை நிராகரித்த பிரபாகரனால், மேற்கண்ட தீர்வை ஏற்கமுடியாது.

புலிகளால் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதற்கு இன்னொரு காரணம், இந்திய இராணுவம் இல்லாத நிலையிலும் முன்னைய ஒப்பந்தத்திற்கு இந்தியா உத்தரவாதம் அளித்தது. இவ்வாறான ஒப்பந்தமும் மூன்றாவது தரப்பு ஒருவரால் உத்தரவாதமளிக்கப்படுகின்றது.

மேற்காசியாவில் அமெரிக்கா இவ்வாறான ஒப்பந்தங்களுக்கு உத்தரவாதமளித்து கையெழுத்திடுகின்றது. பொஸ்னியாவில் நேட்டோ நாடுகள் உத்தரவாதமளிக்கின்றன. ஆனால் இலங்கைப் பிரச்சினையில் உத்தரவாதமளித்து கையெழுத்திட தற்சமயம் யாருமில்லை. வேறு வார்த்தைகளில் சொன்னால் இலங்கை அரசுக்கும் தமிழ் மக்களுக்குமிடையில் ஏற்படும் ஒப்பந்தத்தை உத்தரவாதம் செய்து கையெழுத்திட யாருமில்லை.

## அதீத தன்னம்பிக்கை ஆபத்தை வாங்கும்

அதேசமயம் சந்திரிகா குமாரதுங்கா இப்பிரச்சினையை உண்மையாகவே தீர்ப்பார் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் ஏற்பட்டதும், இந் நம்பிக்கை தமிழ் மக்களுக்கும் ஏற்பட்டால், அது பிரபாகரனுக்கு முடிவுகாலமாகிவிடும் என்பதாலுமே பிரபாகரன் யுத்தம் ஒன்றை தொடங்க அவசரப்பட்டார். அந்த நேரம் இருந்த மாற்று வழியெல்லாம், சில தாக்குதல்களை நடாத்தி சில இராணுவ ரீதியான வெற்றிகளைப் பெறுவதே.

கட்டுமுறிச்சகுளம், மன்னார் போன்ற இடங்களில் நடைபெற்ற இராணுவத் தாக்குதல்கள், மற்றும் எப்ரல் 28,29 இல் புலிகளால் சுட்டுவீழ்த்தப்பட்ட அவ்ரோ விமானங்களும் புலிகளுக்கு அதீத நம்பிக்கையை கொடுத்தது.

இதேசமயம் ராணுவ உயரமைப்புக்களும் தங்களது மூலோபாயங்களை வகுத்துக் கொண்டிருந்தார்கள். இராணுவ உளவுப் பிரிவு தனது ஆய்வு வேலைகளைச் செய்து கொண்டிருந்தது. அரசியல்வாதிகள் பேசிக் கொண்டிருந்த அதேசமயம் இராணுவத்தினர் தமது துப்பாக்கிகளைத் துடைத்துக் கொண்டிருந்தார்கள்.

புலிகளுக்கு ஏப்ரல் மாதம் கிடைத்த வெற்றியானது அவர்களை இறுமாப்பு உள்ளவர்களாக மாற்றியது. அவர்களது நகர்வுகள் யாவும் மிகவும் வெளிப்படையாக இருந்தன. தங்களது சில தளங்களை அவர்கள் எதிரிக்கு வெளிக்காட்டிக் கொண்டார்கள். இதனால் விடத்தல் தீவிலிருந்த கடற்புலிகளின் தளமானது விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலுக்குள்ளானது.

## மரபு ரீதியான போரில் புலிகளுக்கு முடியாது

ஆகாயப் படையினதும், கடற் படையினதும் தாக்குதல்கள் தரைப்படையை ஒழுங்கமைக்க உதவிகரமாக இருந்தது. ஆகாயப் படையுடனும் கடற் படையுடனும் புலிகள் மோதிய சமயத்தில், கிழக்கு மாகாணத்திலிருந்த தரைப்படைகள் வடக்கு மாகாணத்திற்கு நகர்த்தப்பட்டன. புலிகள் இப்படை நகர்வை நிறுத்துவதற்கு மிகவும் சிரமத்தின் மத்தியில் முயற்சித்தார்கள். தனது யாழ்ப்பாண தளபதியான செல்வராசா என்பவர் தலைமையில் 1000 புலிகளை திருகோணமலைக்கு அனுப்பி வைத்தார்கள். ஆனால்அவர்கள் அங்கு செல்லக் காலதாமதமானது. படைகள் அதற்கு முன்னரே வடக்கிற்கு நகர்ந்திருந்தன.

ஆனால் மிகவும் மோசமானது என்னவெனில் இச்சமயத்தில் இராணுவம் வடக்கில் தாக்குதல்களை ஆரம்பித்திருந்தது ஆகும். ஆகவே கிழக்கிற்குப் போனவர்களையும், கிழக்கில் இருந்தவர்களையும் உடனடியாக வடக்கிற்கு வருமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால் இராணுவம் மிக அதிகளவில் குவிக்கப்பட்டதால் புலிகளால் அதற்கு ஈடுகொடுக்க முடியவில்லை.

நல்லூர் ஆலயத்தைக் கைப்பற்றியதானது புலிகளின் பாரிய இன்னொரு பின்னடைவாகும். நல்லூர் பகுதியே புலிகளின் உத்தரவுகள் கட்டுப்பாடுகளை விதிக்கும் மத்திய இடமாக விளங்கியது. இங்கிருந்தே இராணுவத்திற்கெதிரான பல்வேறுபட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இராணுவத்தின் வெற்றிக்கு இன்னொரு காரணம் புலிகளின் இவ்வாறான தளங்களை நிர்மூலமாக்கியதேயாகும்.

நிலத்திலிருந்து ஆகாயத்திற்கு ஏவக்கூடிய ஏவுகணைகளை அவர்கள் கொள்வனவு செய்திருந்த பொழுதும் செய்தித் தொடர்பு பரிவர்த்தனை என்ற விடயங்களை அவர்கள் தட்டிக்கழித்து வந்தார்கள். தமது வானொலி செய்தித் தொடர்புகளிலேயே அவர்கள் மிகவும் கவனம் செலுத்தினார்கள். ஆனால் இவை பாதுகாப்பில்லாததால் தொடர்ச்சியாக எதிரியால் ஒட்டுக் கேட்கப்பட்டது.

## இராணுவ வெற்றிகள் அரசியல் தீர்விலேயே முழுமையடையும்

யாழ்ப்பாணத்தில் இராணுவம் தனது பிடியை இறுக்கியிருந்த போதும் திருமதி குமாரதுங்கா புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளார். முக்கியமான விடயம் இதுதான். ஒரு இராணுவத் தீர்வை எட்டுவதற்கு சிறிலங்கா இராணுவத்தால் முடியாது. யாழ்ப்பாணத்தை இவர்களால் கைப்பற்ற முடியும். ஆனால் இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதென்பது இடைக்காலமானதே. ஆனால் இது ஓர் அரசியற் தீர்வின்கீழ் முழுமைப்படுத்தப்பட வேண்டும்.

ஆனால் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வொன்றை இதுவரை காணமுடியவில்லை. குமாரதுங்காவின் அறிவிப்புக்கள் புலிகளைத் திருப்திப்படுத்தப் போதுமானவையல்ல. இராணுவ சமநிலை புலிகளுக்கு மாறியதன் பின்னரே புலிகள் பேச்சுவார்த்தை பற்றி யோசிப்பார்கள்.

ஆனால் இன்னும் குமாரதுங்கா அவர்களின் சமாதான நகர்வுகள், அவர்கள் மத்தியில் இருக்கக்கூடிய கடும்போக்காளர்களின் நடவடிக்கைகளாலேயே பாதிக்கப்படும் போக்கும் உள்ளது.

## ஜெனரல் கல்கட் அவர்கள் 'புரொண்ட் லைன்' என்ற சஞ்சிகைக்கு அளித்த மற்றுமொரு பேட்டியின் முடிவில் இவ்வாறு கூறுகின்றார்:

இலங்கையின் இனப்பிரச்சினையில் தலையிடும், பேச்சுவார்த்தை நடாத்த விரும்பும் எந்த நாடும், எந்த மனிதனும் இந்தியாவின் உதவி இன்றி அதில் வெற்றிபெற்றுவிட முடியாது. இது யதார்த்தமான உண்மை.

புலிகளும் பிரபாகரனும் ராஜீவ் காந்தியை கொலை செய்த பின்னர் மக்கள் மத்தியில் தமக்கிருந்த அபிமானத்தை இழந்துவிட்டனர். ராஜீவ்காந்தி அவர்களுக்கு செய்த உதவிகளையும் மறந்து கடைசியாக இருந்த துரும்பளவு ஆதரவையும் இழந்தனர். இதனால் முழு இந்தியாவின் அபிமானத்தையும் இழந்தனர். அதனால் தமிழ் நாட்டில் இருந்த ஆதரவையும் இழந்தனர். அவர்கள் அக்கொலையை மாத்திரமல்ல பிரேமதாசா, ரஞ்சன் விஜயரட்ன, லலித் அத்துலத்முதலி, காமினி திசாநாயக்கா, சிறீசபாரத்தினம், பத்மநாபா, அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் எனப் பலரையும் கொலை செய்தனர்.

ஆனால் முக்கியமான ஓர் வேறுபாடு உண்டு என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்தியாவில் இருக்கக் கூடிய தமிழர்களும், தமிழ் நாடும் புலிகளை நிராகரிக்கலாம். அவர்களுடன் தொடர்புகள் அற்றுப் போகலாம். ஆனால் இலங்கையில் இருக்கக்கூடிய தமிழர்களை தமிழ் நாட்டால் நிராகரிக்க முடியாது. இவை இரண்டும் வேறுபட்ட இரு விடயங்கள். இலங்கையில் உள்ள தமிழ் மக்களில் பெரும்பான்மை புலிகள் அல்லாதவர்களே. அவர்கள் சமாதானத்தை விரும்பும் சாதாரண குடிமக்கள். எனவே அவர்களுக்கான ஆதரவு என்றும் இருக்கும். எனவே இலங்கையில் நடக்கும் விடயங்கள் இங்குள்ள அரசியலிலும் ஏதோ ஒரு வகையான தாக்கத்தை ஏற்படுத்தவே செய்யும்.

படிப்பகம்

www.padippakam.com



# புதுக்குடியிருப்பு - நடந்தது என்ன?

கொக்கட்டிச்சோலை பகுதியில் நிலைகொண்டிருந்த புலிகளில் 950 பேர் கடந்தமாதம் 5ம் திகதி தாக்குதலுக்காக புறப்பட்டனர். யாழ்ப்பாணத்தை அரசபடைகள் கைப்பற்றியதன் அறிவிப்பை வெளியிட்டதும், புதுக்குடியிருப்பில் நிலை கொண்டுள்ள விசேட அதிரடிப்படையினர் முகாமை தாக்குவதே இவர்கள் திட்டமாகும்.

யாழ்ப்பாணத்தை அரசபடைகள் கைப் பற்றிக் கொண்டிருக்கையிலே, புலிகளின் தலைவர் 'வடக்கு போனாலென்ன கிழக்கு எம்வசம் உள்ளது.' என பி.பி.சி.யில் சொன்னாரல்லவா? தலைவனின் கூற்றை காப்பாற்றுவது தொண்டர்கள் கடமையல்லவா? இங்கே சனம் செத்தாலென்ன யார் செத்தாலென்ன உறுதியான கொள்கை காப்பாற்றப் பட வேண்டாமா என்ன?


தாக்குதலுக்கு தயாராக வந்த புலிப்படையினரில் 500 பேர் மட்டக்களப்பு வாவிக்கு அப்பாலும், 450 பேர் அதிரடிப்படையினர் முகாம் உள்ள பகுதிகளில் உள்ள பற்றைகளுக்குள்ளும், கிரான்குளம் பகுதிகளில் உள்ள பற்றைகளுக்குள்ளும் பதுங்கியிருந்துள்ளனர்.

தாக்குதல் திட்டம் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அதில் முகாம் தாக்குதல் பிரிவிற்கு ரமேஷ் தலைமையிலும், கிரான்குளம் பிரதான வீதியின் காவல் குழு தலைமை ஜீவனும், தாழன்குடா பிரதான வீதியின் காவல்குழு தலைமை நரேசும் பொறுப்பேற்றுக்கொண்டனர். இம்முகாமின் தாக்குதல் இணைப்பாளராக பாலேந்திரா இருந்தார்.

தாக்குதலுக்கு தயாராக பற்றைகளுக்குள் பதுங்கியிருந்த புலிகள், அன்றைய தினம் காலை ஆற்றுக்கு மீன்பிடிக்கச் சென்றவர்களையும் காலைக்கடன்களை முடிக்கச் சென்ற அவ்வூர்வாசிகளையும் பிடித்து மறைத்து வைத்துள்ளனர்.

5ம் திகதி சரியாக பி.ப. 2.10 மணியளவில் அம்பிளாந்துறையை கடந்து இளநீர்குலைகள், வாழைக்குலைகள் என்பவற்றை ஏற்றிய அந்த வெள்ளைநிற ஹைஏஸ் வான் வயது முதிர்ந்த ஒருவரால் செலுத்திவரப்பட்டது. அந்த வான் கிரான்குளம் துறையடியை அண்மித்ததும் பற்றைக்குள் பதுங்கியிருந்த புலிகள் மூவர் காட்போர்ட் பெட்டிகள் சகிதம் வானை அண்மித்து வெடிப்பொருட்கள் அடங்கிய அப்பெட்டிகளை வானில் ஏற்றியுள்ளனர். இதில் தற்கொலையாளி மேஜர் ரங்கனும் அடங்குவார். வாகனத்தை செலுத்திவந்த வயது முதிர்ந்வர் புலிகளின் உத்தரவுப்படி அப்பகுதியில் உள்ள பற்றை ஒன்றுக்குள் புகுந்துகொண்டார்.

அந்த வான் கிரான்குளம் பிரதான வீதியை நோக்கி செலுத்தப்பட்டது. தற்கொலையாளி ரங்கன் வானை செலுத்த மற்றைய இருவரும் பின்னால் இருந்து கொண்டனர். பிரதான வீதியை அடைந்த அந்த வான் ஓரிடத்தில் நிறுத்தப்பட, பின்னால் இருந்த இருவரும் இறங்கிக் கொண்டனர். அவ்விடத்தில் கிரான்குளம் வாசிகள் சிலர் நிற்கவே இறங்கிய இரு புலிகளும் 'லைசன்ஸ், இன்சூரன்ஸை எடுத்துவருகின்றோம்' எனச் சாடை கூறி பிரதான வீதியின் தென் திசை நோக்கி நடந்து சென்றனர். அவ்விடத்திலிருந்து வான் புறப் பட்டு சில நிமிடங்களின் பின்னர் பாரிய வெடிச்சத்தம் ஒன்று கேட்டது. அதன்பின்னர் அப்பகுதி முழுவதும் வெடி ஓசை கேட்டவண்ணம் இருந்தது. இச்சந்தர்ப்பத்தில் புலிகளால் பிடித்து வைக்கப்பட்டிருந்த ஊர்வாசிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்களும் திக்குதிசை கெட்டு தலை தெறிக்க ஓடியுள்ளனர்.



இந்நேரத்தில் மட்டக்களப்பு நோக்கி கல்முனையில் இருந்து பிரயாணிகள் பஸ், பிரயாணிகள் வான் என்பன வந்து கொண்டிருந்தன. பஸ்ஸில் 4 விசேட அதிரடிப்படையினர் ஏறிவந்துள்ளனர். பிரயாணிகள் பஸ் ஆனது கிரான்குளத்தை அண்மித்ததும் கிரான்குளம் பகுதியில் புலிகளால் போடப்பட்ட 'கட்அவுட்'டினர் இராணுவ சீருடையிலே நின்று பஸ்ஸில் வந்த இராணுவத்தினரைப் பார்த்து, 'அபே கட்டிய இன்னவத' என்று கேட்டுள்ளனர். இருந்த நால்வரும் தங்களின் ஆட்கள் என நினைத்து எழுந்ததும் புலிகள் சரமாரியாகச் சுட்டுள்ளனர்.

இராணுவத்தினர் பிரயாணிகளைக் கட்டிப் பிடித்ததும் புலிகள் வெறிகொண்டு மக்களையும் சுட்டுள்ளனர். அப்போது கிரான்குளம் 'கட்அவுட்'டுக்குப் பொறுப்பாக இருந்த ஜீவன் 'எல்லாரையும் சுடுங்கடா' என காட்டுக் கூச்சல் போட்டிருக்கிறார். பஸ்ஸில் பிரயாணம் செய்தவர்கள் சிலர் அவ்விடத்திலே இறந்தும் சிலர் தலைதெறிக்க பற்றைகளுக்குள் ஓடியுமுள்ளனர். இறந்தவர்களையும் சூடுபட்டவர்களையும் விசேட அதிரடிப்படையினர் மட்டக்களப்பு மற்றும் களுவாஞ்சிக்குடி ஆஸ்பத்திரிகளுக்கு ஏற்றி அனுப்பியுள்ளனர். இதில் மொத்தமாக 29 பொது மக்களும், 26 புலிகளும், 16 விசேட அதிரடிப் படையினரும் இறந்துள்ளனர்.

சம்பவம் நடைபெற்று நான்கு நாட்களின் பின்னரும் பலரது சடலம் கண்டெடுக்கப்பட்டது. சம்பவம் நடைபெற்று 4 நாட்களாக அவ்வீதியில் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படவில்லை. இதனால் தப்பியோடி போக முடியாத மக்களை கிரான்குளம் மக்கள், சமூகத்தொண்டர்கள் அவர்களுக்கான சகல உதவிகளையும் செய்துள்ளனர்.

புலிகளின் ராஜ்யமாக இருந்த யாழ்ப்பாணத்தை புலிகளால் தக்கவைத்துக் கொள்ள முடியவில்லை. அங்கு வாழ்ந்த மக்களை அவர்களால் காப்பாற்ற முடியவில்லை. அவர்களின் அகதி வாழ்க்கைக்கு காரணகர்த்தாக்களும் இவர்கள்தானே. இத்தனைக்கும் யாழ்ப்பாணப் பகுதி நில அமைப்பானது புலிகளுக்கு முற்றிலும் சாதகமான நில அமைப்பாகும். அதையே கோட்டைவிட்ட இவர்கள் எப்படி கிழக்கில் நிலைகொண்டு தாக்குதலை நடத்தமுடியும்? அப்படி நடத்துவார்களாயின் அநியாயமாக அப்பாவிப் பொது மக்களை இவர்களால் இழக்க நேரிடும். இதில் எந்தவித இராணுவ சாதனையையும் சாதித்துவிட முடியாது.

*- மட்டக்களப்பிலிருந்து ஆத்மன்*

## புதுக்குடியிருப்பு முகாமை புலிகள் தாக்கிய சம்பவத்தில் இறந்த பொதுமக்கள் விபரம்

1. சிவலிங்கம் புவனேந்திரன் (38)
   (தபால் ஊழியர்)
   பழத்தோட்டம்,
   களுவாஞ்சிக்குடி.
2. இளையதம்பி இராமக்குட்டி (காவலாளி)
   1ம் குறிச்சி,
   களுதாவளை.
3. மாணிக்கம் சின்னத்துரை (40)
   4ம் குறிச்சி,
   புதுக்குடியிருப்பு.
4. குழந்தைவடிவேல் வெற்றிவேல்
   (இ.போ.ச. நடத்துனர்)
   3ம் குறிச்சி,
   பெரியகல்லாறு.
5. முருகுப்பிள்ளை லிங்கன் (வியாபாரி)
   வேலூர் கொலனி,
   கல்லடி.
6. வேலுப்பிள்ளை ஆனந்தகுமாரசாமி
   (தபால் தரம்பிரிக்கும் அதிகாரி)
   பார் வீதி,
   மட்டக்களப்பு.
7. சிவப்பிரகாசம்- ஹரிச்சந்திரா
   காரைதீவு.
8. கேதாரம் தம்பிமுத்து (48)
   (இ.போ.ச. சாரதி)
   கோட்டைக்கல்லாறு.
9. சுந்தரலிங்கம் ரஜனிகாந்த் (17)
   காரைதீவு.
10. மூக்கையா கந்தசாமி
    கல்முனை.
11. முருகப்பன் வடிவேல்
    நியூடச்பார் றோட்,
    கல்லடி.
12. நாகமணி இன்பஜா (20)
    கிரான்குளம்.
13. காளிக்குட்டி சின்னப்பிள்ளை (70)
    பெரியகல்லாறு.
14. இராமக்குட்டி அருளம்மா
    காரைதீவு.
15. கண்ணப்பன் திருச்செல்வம்
    கொம்மாந்துறை.
16. கேசவன் தவராஜா
    4ம் வட்டாரம்
    புதுக்குடியிருப்பு.
17. இராஜலிங்கம் இந்திரா
    லேக் றோட்,
    மட்டக்களப்பு.
18. பத்மநாதன் (சாரதி)
    புதூர்.
19. பார்த்தீபன்
    ஆரையம்பதி.
20. இப்ராகிம்
    ஏறாவூர்.

★ 4 அடையாளம் காணப்படவில்லை.
5 பெயர் கிடைக்கவில்லை.



## மற்றவன் துயரத்தைப் பகிர்ந்து கொள்ளவாவது....

ஊருக்குச் சொல்லி ஒப்பாரி வைத்து உறவைப் பிரிகின்ற நாட்களெல்லாம் போயிற்று எங்களுக்கு. முடிந்தால் சாலையிலோ அல்லது சவக்கிடங்கிலோ அடையாளங்கண்டு அள்ளிக்கொண்டுபோய் புதைக்கின்ற வாழ்க்கைதான் எமக்குக் கிடைத்திருக்கின்றது. இப்படித்தான் இந்தக் கலைஞனின் சடலத்தையும் இரண்டு நாட்களின் பின் தேடி எடுத்தார்களாம்.

வாழ்க்கையின் அத்தனை அவாவையும் நொடிக்குள் விசியெறிந்துவிடும் கோரயுத்தம் பலிகொண்ட இலக்கியவாதிகள், கலைஞர்களில் இன்னும் ஒருவன். நம்மால் எதுவும் முடியவில்லையெனினும் மற்றவனின் துயரத்தை பகிர்ந்து கொள்ளவாவது இந்த வாழ்க்கை வேண்டும் என்று வாழ்க்கை மீது அவாக்கொண்டு மனிதனாக வாழவிரும்பியவன்.

மட்டக்களப்பு வாசகர் வட்டம் என்றால் எமக்கு அடுத்து நினைவுக்கு வருவது வே.ஆனந்தக்குமாரசாமி என்கிற வீ.ஆனந்தன்தான். சம்மாந்துறை தமிழ்க்குறிச்சிக் கிராமத்தில் பிறந்து மட்டக்களப்பில் வாழ்ந்து வந்த ஆனந்தனின் இலக்கிய சமூகச் செயற்பாடுகள் மிகவும் காத்திரமானவை. வாசகர் வட்டத்தின் ஆரம்பகால அமைப்பாளர்களில் ஒருவர். ஆர்வமுள்ள வாசகர் மட்டுமல்ல வெளிப்படையான விமர்சகரும்கூட. நிலைமாறாத கொள்கையுடன் மலையாள மொழியில் உள்ள பரிச்சயத்தால் நல்ல கதைகளை கவிதைகளை எமக்கு அறிமுகம் செய்திருக்கின்றார். படி, தாரகை தொண்டன், வியூகம், உதயம், மலரும் வாழ்வு என்று பல சஞ்சிகைகளில் இவரது படைப்புக்களை காணலாம். ஈழத்துத் தமிழ் இலக்கித்தில் சிறந்த படைப்பாளியாகவும் விமர்சகராகவும் இருந்த ஆனந்தனின் எழுத்துக்கள் நூலுருவில் கொண்டுவரப்பட வேண்டும்.

வெற்றிடத்தை இயற்கை ஒருபோதும் விடுவதில்லையாம். ஆனால் ஆனந்தன் இல்லாத ஒரு வெற்றிடத்தை நாம் அனுபவிக்க நேர்கிறது என்பதுதான் நமக்கு தொடர்ந்து வரப்போகும் துயரமாக இருக்கும்.

இழந்த குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எங்கள் ஆறுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## வீ. ஆனந்தன்

## ஓர் நினைவுக் குறிப்பு

05.12.95 இல் மட்டக்களப்பு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு விசேட அதிரடிப்படை முகாம் தாக்குதல் சம்பவத்தில் துரதிர்ஷ்டவசமாக அகப்பட்டு அகால மரணமடைந்த வீ.ஆனந்தன் - கவிஞர், விமர்சகர், மட்டக்களப்பு வாசகர் வட்டத்தின் ஸ்தாபகர், மலையாள இலக்கியங்களை மொழிபெயர்ந்து தமிழக்கு அறிமுகம் செய்தவர். மட்டக்களப்பு கலை இலக்கியக் களத்தில் ஆனந்தன் பதித்த தடங்கள் கனதியானவை.

ஈழத் தமிழ் கலைஞர்களை ஊக்குவிப்பதன் மூலம் ஈழத் தமிழ்ப் பராம்பரியக் கலைகளைப் பேணவும், அவற்றை வளர்த்தெடுக்கவும் நோக்கமாகக் கொண்டு 1989இல் அன்றைய வடகிழக்கு மாகாண அரசின் அனுசரணையுடன் ஈழத் தமிழ்க் கலைஞர் ஒன்றியம் உருவாக்கப்பட்டது. ஈழத் தமிழ்க் கலைஞர் ஒன்றியத்தின் சார்பில் 01.10.89 அன்று ஈழத் தொழிற்சங்க சம்மேளன மட்டக்களப்பு அலுவலகத்தில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட கலைஞர்களின் ஒன்றுகூடல் நிகழ்ச்சி திரு. தம்பியப்பா கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றிய ஆனந்தன்-

இதுவரையில் மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழ்க்கலை இலக்கியம் சார்ந்த நிகழ்வுகள் தனிமனித முயற்சிகளே. ஆனால் ஈழத் தமிழ்க் கலைஞர் ஒன்றியம் வட கிழக்கு மாகாண அரசின் அனுசரணை பெற்றிருப்பது அதன் ஏற்பாட்டிற்கு ஊக்கமளிப்பதாயுள்ளது. மட்டக்களப்பின் தேசிய இலக்கியமான நாட்டுப்பால்களும், தேசியக்கலையான நாட்டுக்கூத்தும் முழுமையாக வெளிக் கொணரப்படல் வேண்டும். நாட்டுக்கூத்து உட்பட ஏனைய பாரம்பரியக் கலைகளும் புதிய பரிமாணங்களுடன் வளர்த்தெடுக்கப் படல் வேண்டும். மட்டக்களப்பிலுள்ள நெடும் பாடல்களும்-உதாரணமாக ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் 'வைசூரி' நோய் கண்ட போது பாடப்பெற்ற நெடும்பாடல், 'நற்பிட்டி முனையாள் காவியம்', காலஞ்சென்ற கவிஞர் ராஜபாரதியின் 'தீயுண்ட வீரமுனை' மற்றும் கோயில்காவியங்களும் ஓர் சமூக வரலாற்றுப் பார்வையுடன் வெளிக் கொணரப்படல் அவசியம். இத்தகைய முயற்சிகளால் மட்டக்களப்

(தொடர்ச்சி 11ம் பக்கத்தில்)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF
22, வெளிவட்ட வீதி, வவுனியா சுரேஷ் பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்